# கல்வெட்டு

# KALVETTU

திருவள்ளுவராண்டு 2035 (தாரண ஆண்டு) மார்கழித் திங்கள்



**தையூர் முருகேஸ்வரர் கோயிலில் உள்ள "ஸ்ரீ உரு மேற்று" என்ற வாசகம் பொறிக்கப்பட்டுள்ள விநாயகர் சிற்பம். கி.பி. 9 - 10 ஆம் நூற்றாண்டு**

கல்வெட்டு - காலாண்டிதழ் : 65 (ஜனவரி 2005) விலை ரூ.5—00
தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை

## உள்ளே . . .


| | | பக்கம் |
|---|---|---|
| | பதிப்புரை | 1 |
| 1. | A study of Ear Ornaments in Ancient Tamilnadu<br>- Dr. P.D. Balaji | 2 |
| 2. | அம்பத்தூர் அம்பலவாண சுவாமி கோயில்<br>- சீ. இராமச்சந்திரன் | 11 |
| 3. | சந்தையூர்ச் செப்பேடுகள்<br>- பொ. இராசேந்திரன், முனைவர் வெ. வேதாசலம் | 14 |
| 4. | An Account of the Divisions of Ancient Tamil Army<br>- Dr. S. Soundarapandian | 19 |
| 5. | வல்லம் கல்வெட்டாய்வும் செய்திகளும்<br>- ரா. யமுனாராணி | 22 |
| 6. | தையூர் சிற்பங்களும் கல்வெட்டுகளும்<br>- சீ. இராமச்சந்திரன் | 25 |
| 7. | செம்பரம்பாக்கம் சக்தீஸ்வரர் கோயில் சிற்பங்கள்-கல்வெட்டுகள் ஆய்வு<br>- ச. கிருஷ்ணமூர்த்தி | 28 |
| 8. | பம்மல் புஷ்பகிரீஸ்வரர் கோயில் கல்வெட்டுகள்<br>- பதிப்புக்குழு | 31 |
| 9. | தமிழகக் கல்வெட்டுகள் படியெடுக்கும் முனைப்புத் திட்டம் | 33 |


கட்டுரைகளில் சொல்லப்படும் கருத்துகளுக்குக்
கட்டுரை ஆசிரியர்களே பொறுப்பாவர்

தி. ஸ்ரீ. ஸ்ரீதர், இ.ஆ.ப.
சிறப்பு ஆணையர்,
தொல்லியல் துறை

மூன்றாவது குறுக்குச் சாலை,
சி.ஐ.டி. வளாகம்,
தரமணி, சென்னை – 600 113.
23-12-2004

# பதிப்புரை

இத்துறையால் வெளியிடப்பெறும் ''கல்வெட்டு'' காலாண்டிதழின் 65-ஆவது இதழில் தமிழர்கள் பழங்காலத்தில் அணிந்திருந்த காதணிகள் தொடர்பாக, அகழாய்வுக் குழிகளில் இருந்து கண்டெடுத்த தொல் பொருள்கள் அடிப்படையில் ஒரு கட்டுரை இடம் பெற்றுள்ளது. அம்பத்தூரில் ஞாயிறு தோறும் சந்தை நடைபெற்றதையும் பெத்தராசா (அல்லசானிபெத்தன்னா) அம்பத்தூர் அம்பலவாண சுவாமி கோயிலுக்குச் சர்வமான்யம் வழங்கியதையும் ஒரு கட்டுரை விளக்குகிறது, சந்தையூர்ச் செப்பேடுகள் என்ற கட்டுரை திருமலை நாயக்கர் காலத்தில் சிற்றூர்களை ஆளும் உரிமை கொடுத்த நிகழ்வைக் குறிப்பிடுகின்றது. ஓலைச்சுவடி ஒன்றில் இடம் பெற்ற படைப் பிரிவுகளை ஒரு கட்டுரை பட்டியலிடுகிறது. இந்துறை கண்டறிந்த பல்லவர் காலக் கல்வெட்டுள்ள வல்லம் கோயில் வரலாற்றை ஒரு கட்டுரை விவரிக்கிறது.

'தையூர் சிற்பங்களும் கல்வெட்டுகளும்' என்ற கட்டுரையில் புதிதாகக் கண்டறியப்பட்ட விநாயகர் கற்சிற்பத்தின் பீடத்தில் கல்வெட்டு உள்ளதால் அதன் படமும் இந்த இதழில் இடம் பெறுகிறது. செம்பரம்பாக்கம் சக்தீஸ்வரர் கோயில் சிற்பங்களையும் அங்குப் படியெடுத்த கல்வெட்டுகளையும் ஒரு கட்டுரை விளக்குகிறது. பம்மல் புஷ்பகிரீஸ்வரர் கோயில் கல்வெட்டுகளைத் திருநீர்மலைக் கல்வெட்டுகளுடன் தொடர்புபடுத்தி ஒரு கட்டுரை எழுதப்பட்டுள்ளது. துறையில் உள்ள தொழில்நுட்ப அலுவலர்கள் கல்வெட்டுகள் படியெடுக்கும் முனைப்புத் திட்டத்தின்படி படியெடுத்துவரும் கல்வெட்டுகளுள் சிறப்பான கல்வெட்டுகளை ஒரு கட்டுரை விவரிக்கிறது. இவ்விதழில் கல்வெட்டு, செப்பேடு, ஓலைச்சுவடி, தொல்பொருள், சிற்பம் எனப் பல பிரிவுகளிலும் கட்டுரைகள் இடம் பெற்றுள்ளது ஒரு சிறப்பு அம்சமாகும். எனவே ஆய்வாளர்களுக்கும், வரலாற்றில் ஈடுபாடுள்ள பொது மக்களுக்கும் இவ்விதழ் ''தொட்டனைத்தூறும் மணற்கேணி'' என்ற வள்ளுவரின் வாக்கிற்கிணங்கப் பயனளிக்கும் என்று நம்புகிறேன்.

**அனைவருக்கும் எனது புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.**

**தி. ஸ்ரீ. ஸ்ரீதர், இ.ஆ.ப.**

# A Study of Ear Ornaments in Ancient Tamilnadu

1

## Corroborative Study of Literary Archaeological Sources

**Dr. P. D. BALAJI,**
Lecturer.
Dept. of Ancient Hist. & Archaeology,
University of Madras, Chennai.

The antiquity of wearing ear ornaments in Tamilnadu could be traced from the Proto historic period. The excavations conducted in various places had brought to light a number of ear ornaments, which are dated from 1000 B.C. onwards[1]. There are number of references to ear ornaments in the *Sangam* literature, that are dated to later half of iron age period (100 A.D. to 300 A.D.).[2] From these literature, it is gleaned that the wearing of ear ornament was a customary practice among the Tamils - both men and women. Initially, they wore the organic meterials such as dried fruits, seeds and leaves in their ears. Later on, in consonance with the advancement in metallurgy, ear ornaments made out of precious metals, such as silver and gold, sometimes, studded with precious and semiprecious stones were used. This paper tries to trace the evolution of ear ornaments among the ancient Tamils as gleaned from *Sangam* literature, corroborating material evidences obtained from the archaeological excavations conducted in selective sites such as Tirukkampuliyur(1962-63), Uraiyur(1965-69), Kanchipuram(1970-76), Appukkallu(1977), Mallappadi(1978), Kudikadu(1987) and Tiruverkadu(1996-2000) in Tamilnadu, where in the Department of Ancient History and Archaeology, Univeristy of Madras, conducted excavations.

In the initial stages, as said seeds, dried fruits, sticks and palm leaves were used. In *Ahananuru*[3], we get reference to palm leaves. It is referred as *olai*. It is also called as *patra kundalam*[4]. Besides, seeds, dried fruits and leaves, in *Manimegalal*[5] (*malarvanampukuntha kathi*), we get evidences to

ear ornaments manufactured out of shell, which is refferred as *kodu*.

Next to the organic material, people also used terracotta ear ornaments. Such ornaments were quite popular among the common people, as endorsed by archaeological excavations conducted all over Tamilnadu. A pragmatic study of the terracotta ear ornaments collected from the excavations at Kancipuram[6], Mallappadi[7], Kudikadu[8], Uraiyur[9], Tirukkampuliyur[10] and Appukkallu[11] in Tamilnadu glean, that they could be classified into three sizes i.e. big, medium and small. The big and medium sizes could further be sub divided into heavy type and slim type depending upon its thickness. Old aged people would have used the big and heavy type; people in middle age would have used the medium size and where as the small and slim type could have been used by the young children.

The average dia of the heavy type in big size at Kanchipuram[12] was 3.5 cm and its thickness was 4 cm., while at Tirukkampuliyur[13] its average dia was 4.5 cm and its thickness was 5 cm. The average dia of the slim type in big size was 5 cm at Kanchipuram[14] as well as at Kudikadu[15] and their thickness were 1 cm[16] and 1.3 cm[17] respectively. Due to its lesser thickness, it has been categorized as slim type and consequently does not have much weight.

Similarly, the average dia of the heavy type in medium size ranges fram 2.8 cm to 3.25 cm, as endorsed at Appukkallu[18] and Tiruverkadu[19] and their thickness were respectively 2. 5cm and 2 cm. With regard to slim type size (medium), the average dia seems to have been invariably 3 cm and its thickness was between 1 cm and 1.5 cm at Kanchipuram[20], Appukkallu[21] and Tirukkampuliyur.[22]

The average dia of the smaller size ear ornament ranges from 1.75 cm to 2 cm in placcs like Kanchipuram[23], Tirukkampuliyur[24], Tiruverkadu[25] and Mallappadi[26], where as, the thickness was between 1 cm and 1.5 cm. As said supra these smaller size ear ornaments ought to have been used for children, since it was lesser in weight.

In all these ear ornaments deep or shallow groove was noticeable on the core portion to fix it in the earlobe. With regard to the shape, these ornaments are in circular with both the sides are flat in majority of them; in some cases front side was convex and the back was flat; in a few cases as at Mallappadi[27] the front was concave; while the back side remained flat. Occasionally, we do also get ear ornaments in oval shape as at Tirukkampuliyur.[28] No decoration was traceable on majority of ear ornaments. Only in a few, we find decorations. These were executed on the front side of the ornament alone. A lone floral design in the center as at Tiruverkadu[29], floral grid as at Kanchipuram[30], successive dotted horizontal lines as at Tirukkampuliyur[31] and dots in roulette design as at Kanchipuram[32] were some of the types of decorations found on the ear ornaments. These were incised when the clay was wet. All the decorated ear ornaments were coated with black ochre.

Besides the above said circular type, there were also cylindrical type of terracotta ear ornaments as witnessed at Mallappadi[33] and Uraiyur.[34] In these types, the dia was 1.75 cm to 2 cm and its length was 2.5 cm to 3 cm with a concavity on the cylindrical portion. In majority of the sites taken up for the present study, these ear ornaments were available in the earliest cultural deposit dated between 400 B.C. and 300 A.D.[35]

A corroborative study of these material evidences with that of the terms appearing in the *Sangam* literature, leads one to surmise, whether could these terracotta ornaments be equated with *ganankulai*[36] - indicating a type of ear ornament having heavy weight in *Sangam* period. Being made out of clay, it was heavy and could have been called as *ganankulai*. That was why, for driving away the intruding hens, the ladies had thrown the *ganankalai* from their ears, at the fowls, as referred in *Pattinappalai*[37] in the following words as:

*"koli arintha kodunkar ganankulai"*

In this connection, it is pertinent to mention here, for wearing such like ear ornaments one requires big ear lobes. In *Paripadal*[38] it is mentioned as:

"*gadippigu katir ganankulai peyar*"

which means. before wearing *ganankulai;*. to enlarge the ear lobes, small ear ornaments called *gadippu* was worn by the ancient Tamils.

Besides, there are also ring types. which ought to have been used as ear ornaments. However, it is available in the excavations only in a few sites. Three such like rings were found at Tiruverkadu[39] and two at Mallappadi.[40] The dia of these rings ranges from 2 cm to 2.75 cm and the thickness from 1 cm to 1 25 cm. There was a 1 cm hole in the center. This type could be equated with *vattam*, a cirular type of ear ornament mentioned in *paripadal*.[41]

Further, in many excations conducted in Tamilnadu, we get a number of circular discs that were converted out of potsherds. These discs are in perfect circle shape and having a dia from 5 cm to 1 cm and varying thickness depend upon the thickness of the potsherds. Excavators normally identity them as hop scotches, meant for using them in a game called *pandee*.[42] Since these discs are in perfect circle and available in large number in the excavations, identifying such like discs as hopscotch, requires reexamination. At Mallapadi[43] we are getting such like disc, with dia ranges from 2 cm to 1 cm and the thickness from .75 cm to .25 cm. Such like tiny discs having a dia of 2 cm or 1 cm could not have been used as hopscotch. Similarly, at Kudikadu[44] a circular disc having a dia of 3.5 cm and thickness of .75 cm. made out o quartz was available. Using such like disc made out of quartz for a game seems to be hardly possible. These could also have been used as ear ornaments by the ancient Tamils. In this connection it is pertinent to mention here that, in *Sangam* literature there is a term called *chandrapani*,[45] denoting a circular ear ornament Since these discs are in perfect circular shape, the possibility of identifying them with *chandrapani* has to be probed.

Besides organic raw materials such as stick, leaf and seed and terracotta; in consonance with the development of metallurgy the ear ornaments made out of metal were also seem to have been used. A number of terms appearing in the *Sangam* works, indicating different types of ear ornaments, are furnished *infra.*

1. *Palankulai*[46] consisted of 5 types of ornaments such as
   - a. *pampadam*[47]
   - b. *thantatti*[48]
   - c. *mudichi*[49]
   - d. *ettadikkai*[50]
   - e. *meledu*[51]

   all these would hang as a bunch of fruits in the ear

2. *Kundalam*[52] consisted of
   - a. *sarba kundalam*[53] — *kundalam* having snake motif
   - b. *simma kundalam*[54] — *kundalam* having lion motif
   - c. *magara kundalam*[55] — *kundalam* having fish motif

3. *Kulai*[56] (tube like ornament) consisted of
   - a. *gana kulai*[57] = heavy tube
   - b. *pun kulai*[58] = floral tube
   - c. *por kulai*[59] = golden tube
   - d. *magara kulai*[60] = fish like tube
   - e. *usal kulai*[61] = hanging tube

4. *Ponnolai*[62] = strips of gold converted in to ear ornaments

5. *Chandrapani*[63] = moon shape ear ornament

In the medieval period as well, the people seems to have continued the praatice of using the ancient types of ear ornaments. It is very well endorsed in the sculptures. A study of sculptures would glean that in many of the Pallava sculptures; both men and women were depicted with huge ear ornaments similar to terracotta ear ornaments collected in the excavations that were identified as *ganakulai.* Besides, *sarba kundalam, magara kuddalam* and *chandrapani* are some more types of ear ornaments found in the ears of Brahmancal god and goddess.[64]

Even today the tribes such as Todas, Irulas and Kadars living in the hilly ranges such as Nilgris and Anaimalai in

Tamilnadu are using the ornaments that were used by our ancestors.[66] In this connection, it is pertinent to mention here that, the habitants of *kurinji* seem to have been wearing more number of ornaments including ear ornaments.[66] Among the urban and rural people in Tamilnadu, wearing ear ornament is considered as an important and essential ornament at present. For the newborn babies irrespective of sex, the first major function arranged for, was the ear piercing ceremony. It is considered as an important ceremony for all children. Some people believe that the act of ear piercing provides the child some sort of resistance in his/her body; hence this ceremony is performed soon after the birth. In this connection, it is pertinent to mention here that, in Pudukkottai region, the bridegroom, who missed the ear piercing ceremony in his childhood, compulsorily has to undergo the same, prior to the marriage rituals.[67] Thus, since ancient times in *Tamilagam*, wearing of ear ornament has been considered as an important and auspicious cultural trait. However, *Tolkappiam* says that,

*"katonru kalaithal"* -- *Tolkapptyam 1205*[68]

that is the ladies, soon after the death of their husband removed their ear ornaments. Thus the ear ornament played a vital role including determining the marital status of a lady in the Tamil society.

The foregoing study brought to light the following conclusions;

1. Initially objects such as shell, palm leaf and terracotta were used for making ear ornaments.
2. Among the terracotta ear ornaments, there are three sizes i.e. big, medium and small within each, there are two divisions namely heavy and slim. The heavy type had a high thickness and deep groove; whereas the slim type had a thin thickness with shallow groove. These types of ear ornaments could be identified as *ganankulai*, appearing in *Sangam* literature.
3. With regard to the popular shapes, in some, both the sides were flat and in some, front side alone was either convex or concave,

4. Concavity on one side was noticeable rarely.
5. Designs are incised that were available only on the front side and these were found only on the black ochred ear ornament,, probably to project the design.
6. Possibility of identifying the terracotta disc as ear ornament has to be studied further.

*Foot Notes*

1. B. K. Gururajarao, *The Megalithic Culiure in South India*. p.326
2. K. A. Nilakanta Sastri, *A History of South India*, p. 365
3. Ahananuru 337;7
4. S A. Raghavan, *Tamilnattil Anikalangal* (Tamil) p. 197
5. *Manimekalai*, iv : 56
6. The author of this paper physically examined the objects in the Department of Ancient History and Archaeology, University of Madras
7. *Ibid*
8. *Ibid*
9. *Ibid*
10. *Ibid*
11. *Ibid*
12. Prelimenary Report on Knachipuram Excavations
13. T. V. Mahalingam, *Excavations in the Lower Kaveri Valley*
14. Prelimenary Report on Kanchipuram Excavations
15. Prelimenary Report on Kudikadu Excavations
16. Prelimenary Report on Kanchipuram Excavations
17. Prelimenary Rcport on Kudikadu Excavations
18. Prelimenary Report on Appukkallu Excavations
19. T. V. Mahalingam. *Op. Cit*
20. Prelimenary Report on Kanchipuram Excavations
21. Prelimenary Report on Appukkallu Excavatlons

22. T. V. Mahalingam‘ *Op. Cit*, p. 54
23. Prelimenary Report on Kanchipuram Excavations
24. T. V. Mahalingam *Op. Cit.*, p. 54
25. *Ibid*
26. Prelimenary Report on Mallappadi Excavations
27. *Ibid*
28. T. V. Mahalingam, *Op. Cit.*, 54
29. Prelimenary Report on Tiruverkadu Excavations
30. Preiimenary Report on Kanchipuram Excavations
31. T. V. Mahalingam, *Op. Cit*,,
32. Prelimenary Report on Kanchipuram Excavations
33. Prelimenary Report on Mallappadi Excavations
34, K. V. Raman, Report on Uraiyur Excavations
35. *I.A-R.*, 1962-63; 1965-69; 1970-76; 1977;1978; 1989; 1996-2000
36. *Kalingattuparani*, 142:14; *Paripadal*:, 1:34
37. *Pattinappalai*, 22-23
38. *Paripadal*, 34
39. Prelimenary Report on Tiruverkadu Excavations
40. Prelimenary Report on Mallappadi Excavations
41. *Paripadal*, 15-61; 21:42
42. It is the view held by of the excavators who conducted excavations in Tamilnadu
43. Prelimenary Report on Mallappadi Excavations
44. Prelimenary Report on Kudikadu Excavations
45. *Paripadal* 15:61; 21:42
46. *Paripadal* 10:1
47. S.A. Raghavan *Op. Cit*, p,17
48, *Ibid*
49. *Ibid*
50. *Ibid*
51. *Ibid*
52. *Paripadal* 10:1

53 S.A. Raghavan, *Op. Cit.*, p.197
54. S.A Raghavan, *Op. Cit.*, p.197
55. *Civagacintnmani*, 2696:4
56. *Ahananuru* 3:17; *Kuruntogai*, 159:56 etc
57. *Paripadal* 34
58. *Payipadal*, 11:95-96
59. *Silapatikaram*, 6: 103-5
60. S.A. Raghavan, *Op. Cit.*, p,199
61. *Silapatikaram*, 6:104
62 S.A. Raghavan, *Op. Cit.*, p.195
63 *Paripadal*, 15:61; 21:42
64. V.Ganapathi Sthapathi, *Sirpasennul*(Tamil), p.90
65. S.A. Raghavan, *Op.Cit.*, pp.1-14
66. S.A, Raghavan, *Op.Cit.*, p.66
67. Personal interview with the nativcs of Pudukottai region
68 *Tolkappiyam*, *Porul*, 262:1

## புதிய சமணர் சிற்பம்

புதுக்கோட்டை மாவட்டத்தில் இலுப்பூர் வட்டத்தில் குடுமியான்மலைக்கு மேற்கில் 3 கி-மீ. தொலைவில் அமைந்துள்ள சிற்றூர் பரம்பூர். அண்மையில் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை பரம்பூரில் கி.பி. 10-ஆம் நூற்றாண்டுச் சமணர் சிற்பம் ஒன்றைக் கண்டறிந்தது. பரம்பூரில் கங்கனேரி என்றழைக்கப்படும் குளத்தின் கரையில் இச்சிற்பம் காணப்படுகிறது. சுமார் நான்கடி உயரமுள்ள இச்சிற்பத்தில் தீர்த்தங்கரர் சிம்மாசனத்தின் மீது அர்த்த பரியங்காசனத்தில் அமர்ந்துள்ளார். தீர்த்தங்கரரின் தலைக்கு மேல் முக்குடையும், முக்குடைக்கு மேல் அசோக மரக் கிளைகளும் காணப்படுகின்றன. தீர்த்தங்கரருக்கு இருபுறமும் பக்கத்திற்கொருவராக வித்யாதரர் நின்ற நிலையில் உள்ளனர். ஆலத்தூரிலும் இதே காலத்தைச் சேர்ந்த சமணத் திருமேனி ஒன்று காணப்படுகிறது.

**திரு. பொ. இராசேந்திரன்**
சிறப்புநிலை கல்வெட்டாய்வாளர்
**திரு. சொ. சாந்தலிங்கம்**
தொல்லியல் அலுவலர், மதுரை

# 2 அம்பத்தூர் அம்பலவாண சுவாமி கோயில்

சீ. இராமச்சந்திரன்
கல்வெட்டாய்வாளர்

திருவள்ளூர் மாவட்டம் அம்பத்தூர் வட்டம் அம்பத்தூரில் ஈ. எஸ், ஐ. மருத்துவமனைக்கு அருகில் சிறிய சிவன் கோயில் ஒன்று உள்ளது. அம்பலவாணசுவாமி கோயில் என வழங்கப்படும் இக்கோயிலைச் சீரமைத்துக் கட்டுவதற்காக உள்ளூர் மக்கள் திருப்பணிக் குழு அமைத்துச் சீரமைப்புப் பணி மேற்கொண்ட போது நிலத்தினடியில் புதையுண்டிருந்த கல்வெட்டொன்று கண்டறியப்பட்டது. இச்செய்தி, அத்திருப்பணிக் குழுவினரால் தொல்லியல் துறைக்குத் தெரிவிக்கப்பட்டது. இச்செய்தியினடிப்படையில் 19-02-04 அன்று. துறையின் கல்வெட்டு படிப்பவர் திரு. ஜி. ஈஸ்வரன் அவர்களுடன் சென்று அக்கல்வெட்டு படியெடுத்து வாசிக்கப்பட்டது. கல்வெட்டின் வாசகங்களாவன:

1. சாதாரண வருஷம் அ[ற்]
2. பசி மாதம் நாலாந்தியதி அ
3. ம்பத்தூர் உடையவர் நயினா[ர்]
4. சிற்றேரி உடைய நயினாற்கு ஸ்ரீம
5. ன் மகா மண்டலேசுர மிசுர
6. கண்ட கட்டாரி சாளுவ மல்லை
7. ய தேவ மகாராசாவின் தன்ம
8. மாக காள ராசாவும் பெத்தி ராசா
9. வும் தன்ம சாதனம் பண்ணின
10. படி அம்பத்தூரில் நாயற்று
11. க் கிழமை நாள் சந்தை [நடக்]
12. கையில் யிந்த சந்தையி
13. ல் உள்ளாயம் அடிக்காசு
14. அள்ளு பண்டம் உண்டா
15. னது பாதி உடையாற்கு சறு

16. வ மானியமாக திருப்ப
17. ணிக்கு நடக்க கடவதா
18. கவும் நின்ற பாதியில்
19. பண்டாரத்தாற்கு யிர
20. ண்டு பங்கும் காணியா
21. ளற்கு ஒரு பங்குமாக நடக்
22. க கடவதாகவும் யிந்த நி
23. ன்றையம் சந்திராதித்த
24. . . . . . . .

**கல்வெட்டு பற்றிய விளக்கம்**

இக்கல்வெட்டில், சக ஆண்டு குறிப்பிடப்படாமல் பிரபவாதி ஆண்டான சாதாரண ஆண்டு குறிப்பிடப்பட்டுள்ளது. இது கி.பி. 1490க்குப் பொருத்தமானதாகும். இக்காலகட்டத்தில் விஜயநகர அரசினை சாளுவ வம்சத்தவர் ஆண்டு வந்தனர். கட்டாரி சாளுவ மல்லையதேவ மகாராசா என இக்கல்வெட்டில் குறிப்பிடப்படுபவர் ஆந்திர மாநில நெல்லூர் மாவட்ட உதயகிரிச் சிற்றரச மரபினராக இருந்து விஜய நகர அரியணையைக் கைப்பற்ற முயன்ற மல்லைய தேவராயராக இருக்கலாம். காளராசா, பெத்திராசா எனக் குறிப்பிடப்படுபவர்கள் முறையே காளஹஸ்திப் பகுதியின் சிற்றரசராகவும், ஆந்திர கவிதா பிதாமகன் அல்லசானி பெத்தன்னாவாகவும் இருக்கலாம். இவர்களுள் பெத்திராசா, கிருஷ்ண தேவராயரின் ஆட்சிக் காலத்தில் (கி.பி. 1520) விழுப்புரம் வட்டம் அன்னியூர்க் கல்வெட்டில் இடம் பெறுகிறார். (S.I I. Vol. XVI No. 68) அக்கல்வெட்டு, அல்லசானி சொக்கராஜு மகனும், வசிஷ்ட கோத்திரத்தவனும், ஆந்திர கவிதா பிதாமகனுமான பெத்திராஜுவுக்குரிய நாயங்கர சீமையாகிய கருவாச்சி சீமையில் கோயில் எழுப்பிய செய்தியைக் குறிப்பிடுகிறது. (கருவாச்சி பாளையம் என்ற ஊர் விழுப்புரம் பகுதியில் உள்ளது). நமது கல்வெட்டு, காளராசா, பெத்திராசா இருவரும் சேர்ந்து அம்பத்தூரிலுள்ள சிற்றேரி உடைய நாய[க*]னார் என்ற பெயருடைய சிவனுக்கு, அம்பத்தூரில் ஞாயிற்றுக்கிழமை தோறும் கூடுகிற சந்தையில் வசூலிக்கப்படும் உள்ளாயம், அள்ளுபண்டபம், அடிக்காசு ஆகிய வரியினங்களில் பாதிப் பங்கைக் கொடையாக வழங்குகின்றனர்; மறுபாதியை மூன்று பங்காகப் பிரித்து, இரண்டு பங்கினைப் பண்டாரத்தார்

எனப்படும் அரச அலுவலர் (அல்லது கருவூல அதிகாரி)க்கும், ஒரு பங்கினைக் காணியாளர் எனப்படும் நிலவுடைமையாளர்க்கும் வழங்குகின்றனர், எனக் குறிப்பிடுகிறது.

இக்கல்வெட்டின் மூலம், 15-ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் அம்பத்தூரில் ஞாயிற்றுக்கிழமை தோறும் சந்தை கூடிற்று எனத் தெரிகிறது. இது பெரியபாளையம், ஊற்றுக்கோட்டை ஆகிய ஊர்களுக்குச் செல்லும் வணிகப் பெருவழியில் அம்பத்தூர் அமைந்திருந்தது என்பதை உணர்த்தக் கூடும். ஊற்றுக்கோட்டை யிலிருந்து கார்வேட்நகர், காளஹஸ்தி போன்ற அரசியல், வணிக அல்லது வழிபாட்டு முதன்மையுடைய ஊர்களுக்குச் செல்லும் சாலைகள் உள்ளன. இவை பழமையான பெருவழிகளாகும். விஜயநகர ஆட்சிக்காலத்தில் இப்பெருவழிகள் முதன்மையான போக்குவரவு மார்க்கங்களாக இருந்துள்ளன.

இக்கல்வெட்டு கண்டறியப்பட்டுள்ள இடம் தற்போது அம்பல வாணசுவாமி கோயில் என வழங்கப்படுகிறது. இது அம்பத்தூர் என்ற ஊர்ப்பெயருக்குப் பொருந்தக்கூடிய வகையில் தற்காலத்தில் உருவாக்கிக் கொள்ளப்பட்ட பெயராக இருக்கலாம். கல்வெட்டில் இக்கோயில் இறைவன் பெயர் ''சிற்றேரி உடைய நயினார்'' எனக் குறிப்பிடப்படுகிறது. இக்கோயில் அமைந்துள்ள இடம், பெயருக்கேற்பச் சிறிய குளத்தின் கரையில் அமைந்துள்ள மேட்டுப் பகுதியாகும். இக்கோயிலின் பழைய அமைப்பு முற்றிலும் மாற்றப் பட்டுவிட்டதெனினும், தூங்கானை மாடம் (கஜபிருஷ்ட விமானம்) இருந்துள்ளது என்பதற்கு அடையாளமாக லாட வடிவ அடித்தள அமைப்பு தரைமட்டத்தில் தென்படுகிறது. மேலும், திருப்பணியின் போது தோண்டியெடுக்கப்பட்ட பழைய கற்சிலை ஒன்று தற்போது இப்பகுதி மக்களால் அகத்திய முனிவர் எனக்கருதி வழிபடப்படு கிறது. இச்சிலை அர்த்தபர்யங்காசனத்தில் அமர்ந்து கைகளைத் தியான முத்திரையில் வைத்திருப்பது போன்ற தோற்றத்தில் காணப்படுவதால் முனிவராகக் கருதி இவ்வாறு மக்களால் வழிபடப் படுகிறது போலும். இது சங்கநிதியாக இருக்கவும் வாய்ப்புண்டு. இச்சிற்பம் கி.பி. 9-10 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக இருக்க லாம். அம்பத்தூர் அம்பலவாண சுவாமி கோயில் பற்றிய வரலாற்றை முழுமையாக ஆய்வு செய்வதற்கு மேலும் தடயங்கள் தேவை. காலப்போக்கில் அவை கிடைக்க வாய்ப்புண்டு.

# 3 சந்தையூர்ச் செப்பேடுகள்

பொ. இராசேந்திரன்
முனைவர் வெ. வேதாசலம்
கல்வெட்டாய்வாளர்கள், மதுரை

## இடம்

மதுரை மாவட்டத்தில் தமிழகத் தொல்லியல்துறை தீவிர கல்வெட்டாய்வு முகாம் மேற்கொண்டபோது திருமலைநாயக்கர் காலத்தில் எழுதப்பட்டதாகக் கருதப்படும் இரு செப்பேடுகளைக் கண்டறிந்தது. இச்செப்பேடுகள் பேரையூர் வட்டம் சந்தையூரில் தலையாரி மூப்பர் வேல்சாமியிடம் உள்ளன. இவை தொடர்பாகத் தகவல் தந்து செப்பேடுகளைப் படியெடுக்கத் துணை புரிந்தவர்கள் சந்தையூர் ஜமீன்தார் கே. ஜனார்த்தனபாண்டியன் மற்றும் உத்தமபாளையம் கல்லூரி வரலாற்றுத்துறைப் பேராசிரியர் முனைவர் வர்கீஸ் செயராஜ் ஆகியோர் ஆவார்கள்.

## அமைப்பு

தமிழில் எழுதப்பட்டுள்ள இச்செப்பேடுகள் ஒரே அமைப்பையும் ஒரே அளவையும் கொண்டுள்ளன. 14 செ.மீ. அகலமும் 22 செ.மீ. அகலமும் உடையன. தலைப்பகுதியின் நடுவில் ஒரு துளையுடன் கூடிய அரைவட்ட இதழ் அமைப்பும் இருமுனைகளில் சிறிய இதழ் அமைப்பும் பெற்றுள்ளன. முதல் பட்டயத்தில் முன்பக்கம் 35 வரிகளும் பின்பக்கம் 14 வரிகளுமாக மொத்தம் 49 வரிகள் காணப்படுகின்றன. இரண்டாவது பட்டயத்தில் முன்பக்கம் 33 வரிகளும் பின்பக்கம் 13 வரிகளுமாக மொத்தம் 46 வரிகள் உள்ளன.

## காலம்

இரு செப்பேடுகளிலும் அவை எழுதப்பட்ட தமிழ் ஆண்டான ராக்ஷச (ராச்சிதா) ஆண்டு ஆவணி மாதம் ஒன்பதாம் தேதி குறிப்பிடப்படுகிறது. ராக்ஷச வருடம் திருமலைநாயக்கர் கரலத்திற்குப் பின்னர் 1665-ல் வருகிறது. இச்செப் பேடுகள் இரண்டிற்கும் சாட்சியாகக் கையொப்பம் இட்ட சிலரது பெயர்கள் ஒன்றாகக் காணப்படுகின்றன. எனவே இவை இரண்டும் ஒரே காலத்தில் ஒரே ஆண்டில் எழுதப்பட்டவையாகத் தோன்றுகின்றன. இரண்டு செப்பேடுகளிலும் இப்பட்டயங்கள் செய்த ஆசாரிமார் கரனுசாபுரம் என்ற ஊரைச் சார்ந்தவர்களாகக் குடுப்பிடப்படுகின்றனர். திருமலை நாயக்கர் காலத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் பிற்காலத்தில் செப்பேடாக எழுதப்பட்டிருக்க வேண்டும் எனத் தோன்றுகிறது.

## செப்பேட்டுச் செய்தி

### முதல் செப்பேடு

இரண்டு செப்பேடுகளும் தொடர்புடைய ஒரு செய்தியைப் பற்றியே தெரிவிக்கின்றன. முதல் செப்பேடு பின்வரும் செய்தியைக் கூறுகிறது, சந்தையூரில் சலுப்ப பெத்தண்ண செட்டி என்பவன் துரைத்தனம் (அதிகாரம்) பண்ணிக்கொண்டிருந்தபோது அவனிடத்தில் காவல்காரனாக இருந்த வீரண்ண சேர்வைகாரன் அவனிடத்தில் முரண்பட்டு அவனைக் கொன்றான். அதன் பின்னர் இப்பகுதியில் பாளையக்காரனாக இருந்த ஒன்பது கம்பளம் கூளப்ப நாயக்கரிடத்தில் பட்டம் கட்டி தலையெடுத்தான். பின்னர் சபையைக் கூட்டிப் பாளையக்காரனுக்குக் கூளப்ப நாயக்கர் என்று பட்டம் கட்டினான். பாளையப்பட்டும் ஊரும் உண்டாக்கினான். இதனால் மகிழ்ச்சியடைந்த கூளப்ப நாயக்கரிடத்தில் வீரணன் சேர்வைகாரன் கேட்டுக்கொண்டபடி, அவரது பதினெட்டுப்பட்டிச்கும் 'காவல் நாட்டாண்மை சேருவைகாரன்' என்ற 'சாதி கம்பளி அதிகாரம்' படைத்தவனாக நியமிக்கப்பட்டான். கூளப்பநாயக்கர் அவனுக்குக் குடிமக்கள் செய்ய வேண்டிய மரியாதைகள் குறித்து எழுதி பட்டயம் வழங்க உத்தரவிட்டார்.

இப்பட்டயம் வீரணன் சேர்வைகாரனுக்குரிய காவல்மானியம், அவனுக்கு ஊர்மக்கள் கொடுக்க வேண்டிய தானியம், ஆடு போன்ற பொருட்கள், மற்றும் தீர்த்தம் திருமாலை மரியாதைகள் பற்றிக் கூறுகிறது. இதில் கூளப்ப நாயக்கனும் மற்றும் கணக்குப்பிள்ளை மணியகாரர் போன்ற பலர் சாட்சிகளாகக் கையொப்பம் இட்டுள்ளனர்,

### இரண்டாம் செப்பேடு

முதல் செப்பேட்டில் கூறப்பட்ட செய்தி நடந்தபிறகு சந்தையூர் பகுதிக்குச் சீமைபார்க்கத் திருமலைநாயக்கர் வந்திருந்தார். சந்தையூர் கிருஷ்ணன் கோயிலில் அமர்ந்திருந்த திருமலைநாயக்கரைச் சந்தையூர் பாளையக்காரர் கூளப்பநாயக்கரும் வீரணன்சேர்வைக்காரனும் சேர்ந்து அவர் முன்பு பாதகாணிக்கை வைத்துக் கண்டார்கள். முன்னர் நடந்த செய்திகளைச் சொன்னார்கள். இதனால் மகிழ்ச்சியடைந்த திருமலைநாயக்கர் வீரணன்சேருவைகாரன் தொடர்பாகக் கூளப்பநாயக்கர் செய்த செயலைத் தாமும் உறுதி செய்தார். வீரணன்சேர்வைக்காரனை அவனது சாதிக்குப் 'பட்டத்து மூப்பன்' என்று கூறி சாதி கம்பிளி பட்டயத்துக்கும் பதினெட்டுப்பட்டிக் `கிராமத்துக்குத் தலங்காவல் பட்டயத்துக்கும் உத்தரவு அளித்தார் என்று இரண்டாவது செப்பேடு கூறுகிறது.

வலையர். மூப்பன்மார் என்று அழைக்கப்பட்ட வீரணன் சேர்வைக்காரனது சமூகத்தினர் இருக்கும் எல்லைகளும் அவனுக்குக் குடிமக்கள் செய்ய வேண்டிய மரியாதைகளும் இச்செப்பேட்டில் கூறப்பட்டுள்ளன. இறுதியில் திருமலைநாயக்கரும் கூளப்பநாயக்கரும் செப்பேட்டில் கையொப்பம் இட்டுள்ளனர்·

நாயக்கர் காலத்தில் ஒவ்வொரு சாதியிலும் 'சாதிக்கப்பளக்காரன்' என்று சிலர் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் அச்சமூகத்தினைக் காக்கும் காவலர்களாகவும் சாதியில் மேடுபள்ளம் ஏற்படும்போது கம்பிளியில் அமர்ந்து தீர்வு செய்யும் அதிகாரம் படைத்தவர்களாகவும் விளங்கியுள்ளனர். இதுபோன்று சாதி கம்பளி அதிகாரம் அளித்தமையைக் குறிக்கும் செப்புப்பட்டயங்களைத் திண்டுக்கல் மாவட்டம் பொம்மயக்கவுண்டன்பட்டியில் கண்டறிந்து தமிழகத் தொல்லியல் துறை 'திருமலைநாயக்கர் செப்பேடுகள்' என்ற நூலில் வெளியிட்டுள்ளது.

## முதல் செப்பேட்டு வாசகம்

1. உ கிருஷ்ண
2. சகாயம்
3. றாச்சிதஞு ஆவணி மீ" ௨௯௨ சந்தையூ
4. ரில் சலுப்ப பெத்தண்ணசெட்டி துரத்
5. தனம் பண்ணிக் கொண்டிருந்தா
6. ன் அவனிடத்தில் வீரண்ண சேறுவைகாற
7. ன் மாசம்கள் ௬ வசத்துச்கு காவல்க்காறனா
8. க யிருந்தான் அப்போது சந்தையூரில் சலு
9. ப்ப செட்டிக்கும் வீரண்ணசேறுவைகாற
10. னுக்கு சல்லியம் வந்திது அப்படி ஒருனா
11. ள் வெள்ளிக்கிளமை தினத்தில் நடுச்சா
12. மத்தில் சலுப்பனை வெட்டி பச்சைகாறங் கெ
13. ாண்டு ஒன்பது கம்பளம் கூளப்ப னாக்க
14. றிடத்தில் வய்த்து பட்டங்கட்டி கய்யெடுத்த
15. ான் சபையைப் பெருக்கி கூளப்பனாக்கற்
16. ரென்று பட்டங்கட்டி பாளையப்பட்டு ஊ
17. றும் உண்டாக்கினான் வீரணன் சேறுவை
18. காறன் - கூளப்பனாக்கற் அரமனையாருக்கும் ஒ
19. ன்பது கம்பளத்துக்கும் - றாணுவத்துக்கு சந்தோ
20. சமாகி உனக்கு என்ன வேணுமென்று கேட்
21. டாற்கள் வீரணன்சேறுவைகாறன் சொ
22. ன்னது சந்தையூற் கூளப்பனாக்கரை சே
23. ர்ந்த பதினெட்டுப்பட்டிக்கும் காவல் நாட்டா
24. மை சேறுவை என சாதிக் கம்பளிக்காறனாகவும்
25. ஷ மலையில் தென்மலைக்குக் கானகசாதிக் க
26. ம்பளி-யிப்படி சாதினப்பட்டயத்துக்கு
27. உத்தறவாக வேணுமென்று கேட்டான் அந்த

28. ப்படிக்கி உத்தறவு குடுத்தாற்கள் யிந்த மூ
29. ன்றுவகைக்கி மானியம் நஞ்சை கூளப்பனாக
30. ற் பாளையப்பட்டைச் சேற்ந்த கம்மாளரில் எ
31. ௲ ௰ ா - விரைப்பாடு பிஞ்சை சாய சங்கி
32. லி யிதுவும் காவலுக்கு விபறம் கூளப்பனா
33. க்கரைச் சேற்ந்த பதினெட்டுப்பட்டி கிறாமத்தி
34. லுள்ள குடியானவன் கட்டின வீட்டுக்கு ௨ க
35. முக்குறுணி தானியம் ஆடு வச்சிருக்கப்பட்ட

**பின் பக்கம்**

36. வன் கும்புகிடாலி-க-யேறுக்கு-சூ மில
37. தீத்தம்-திருமாலை காச்சி வருமானம் - அர
38. மனை சேருவைகாறனுக்கு யிந்தப்படி வருசா
39. ந்திரம் நடக்கும்படிக்கி சாதினபட்டயம் எ
40. ழுதிக் குடுத்து யிந்தப்படிக்கி றாசமானிய ஸ்ரீ
41. ரி கூளப்பனாக்கறவர்கள் கய்யில் ஒப்பம்
42. யிதற்கு சாட்சி கணச்கு சுந்தரம்பிள்ளை உ
43. சாச்சி கம்பளத்து பெரியமுத்துனாக்கற்-௲-
44. சாச்சி-சிவலிங்கம் மணியகாறன் யிை
45. த யாதாமொருதற் அடி அளித்தால்
46. சதிரகிரி சுந்தரமகாலிங்கம் கிஷ்ட்ட
47. ணமுர்த்தி கேள்ப்பாற யிந்தப்பட்டயஞ்
48. செய்தவன் கானுசாபறம் ஆசா
49. ரி வேணுங் காமாட்சிஅம்மன் துணை வ.

## இரண்டாம் செப்பேட்டு வாசகம்

1. உ கிஷ்ட்டண
2. சகாயம்
3. றாச்சிதா ஹு ஆவணி மீ௨௬௨ ஸ்ரீரிம
4. து மதுறாபுரித்தலத்துக்கு கற்த்தறாகிய மகறா
5. ச மானிய ஸ்ரீரி திருமலைனாயக்கரவர்கள்ச்
6. சந்தையூர் கிருஷ்ட்டண சுவாமி கோவிலில்
7. சீமை பாற்க்க வந்திரங்கி யிருந்தார்கள் அ
8. ப்போது றாசமானிய ஸ்ரீரி சந்தையூர் கூளப்
9. பனாக்கரும் - வீரணன் சேருவைகாரனும் படி
10. பார்க்கிலை பாதகாணிக்கை ௨ ரு௰ ௨ பொன்

11. வச்சு கண்டு கொண்டார்கள் றாசா சந்தோச
12. மாகி என்ன விபரமென்று கேட்டார் அப்பே
13. ாது கூளப்பனாக்கர் அரமனையாறும் வீரண
14. ன் சேறுவைகாரனும் - முன் சந்தையூர் கூள
15. ப்பனாக்கரை உண்டு பண்ணின விபரங்ளைச்
16. சொன்னார்கள் சொன்னதின் பேரில் றாசா
17. சந்தோஷமாகி ஷயான் சாதிக்கி பட்டத்து மூப்
18. பனென்றும் - சாதிக் கம்பளிக்கார னென்
19. றும் - சாதிக் கம்பிளிப் பட்டயத்துக்கும் ஊறு
20. ப் பதினெட்டுப்பட்டி கிறாமத்து தலங்காவல்
21. ப் பட்டயத்துக்கும் உத்தரவாச்சுது ஷ யான் சா
22. தி வலையன் மூப்பன்மார் யிருக்கப்பட்ட யிட
23. த்துக்கு மால் மதுரை மேலவாசல் வரைக்கும்
24. வடக்குமால் உத்தப்பனாக்கன் வெள்ளைம(ா)லை
25. வரைக்கும் மேற்க்குமால் கூடலூர் கம்பத
26. ரைக்கும் யிந்த பூமிகளில் உள்ள வலை
27, யன் மூப்பன்மார் சாதிக்கிப் பட்டத்து மூப்பன்
28. னே கம்பிளி போட்டு பிடி செம்பும் வய்த்து உ
29, ளுக் காந்தால் தலைகட்டுக்கு ய ரு பணம் வச்சு
30. க் கண்டு கொள்கிரது எந்திரிக்கும் போதும்
31. ய ரு பணம் தட்டு பார்க்கு வெத்திலை வச்சு கும்பி
32. ட்டு எளுப்பவும் யிந்தப்படிக்கி ஆடி தீவாளிக்கி
33- கும்புக்கு கிடாயிக் குடுக்கவும் யிந்தப்படிக்கி

## பின் பக்கம்

34. எங்கள் மனராசியால் எழுதிக் குடுத்த சா
35. தனப்பட்டயம் யிந்தப் படிக்கி கர்தறாகிய
36. திருமலை னாயக்கரவற்கள் திருக்கரத்தினால்
37. ஒப்பம் யிந்தப்படிக்கி சந்தையூர் கூளப்
38. பனாக்கர் கய்யில் ஒப்பம் யிதை யாதாமொரு
39. ருதர் அடிஅளித்தால் சதிரகிரி சுந்தர ம
40. காலிங்கம் கிருஷ்ட்டணமூர்த்தி கேள்ப் ப
41. ார் யிதற்கு சாட்சி சந்தையூர் கணக்கு சுந்
42. தரம்பிள்ளை -௨- சாட்சி சம்பளத்து பெரியமு
43. த்து னாக்கர் -ரு- சாட்சி சிவலிங்க மணியகா
44. ரன் யிந்தப் பட்டயஞ் செய்தவன் கானுச
45. ாபறம் சுந்தரம் ஆசாரி உ வேணுங்
46. காமாச்சி அம்மன் துணை உ.

# 4 An Account of the Divisions of Ancient Tamil Army

**Dr. S. Soundarapandian**
Curator
Govt. Oriental Manuscripts Library & Research Centre,
Chennai-5

In the nepertoire of Government Oriental Manuscripts Library and Research Centre, Chennai-5, very rare Tamil Lexicon, known as Nighantu is being preserved under No. D. 32.

This is a paper manuscript running to 132 pages. This is an unpublished manuscript date of which is later than 16th centnry A.D., which is currently being edited and translated into English for publication in future.

Herein are available a few Sutras highlighting Ancient Tamil Army.

According to this manuscript, we come to grasp that there were, in the days of yore, a few divisions in army ; They are :-

| | | |
|---|---|---|
| 1. Patāti | 4. Kaṇam | 7. Camu |
| 2. Cenamukam | 5. Vakini | 8. Anikam |
| 3. Kuḻumam | 6. Pirataṉai | 9. Akkuroṇi |

In accordance with our unpublished manuscript, each of the above classifications, will have the following strength in regard to foot-soldiers, cars, elephants, and horses:-

**I. Patati**

| | | |
|---|---|---|
| Infantry | ... | 5 |
| Car | ... | 1 |
| Elephant | ... | 1 |
| Horse | ... | 3 |
| Totaḻ | | 10 |

**II. Cenamukan**

| | | |
|---|---|---|
| Infantry | ... | 15 |
| Car | ... | 3 |
| Elephant | ... | 3 |
| Horse | ... | 9 |
| Total | ... | 30 |

**III. Kulumam**

| | | |
|---|---|---|
| Infantry | ... | 45 |
| Car | ... | 9 |
| Elephant | ... | 9 |
| Horse | ... | 27 |
| Total | ... | 90 |

**IV. Kanam**

| | | |
|---|---|---|
| Infantry | ... | 135 |
| Car | ... | 27 |
| Elephant | ... | 27 |
| Horse | ... | 81 |
| Total | | 270 |

**V. Vakini**

| | | |
|---|---|---|
| Infantry | ... | 405 |
| Car | ... | 81 |
| Elephant | ... | 81 |
| Horse | ... | 243 |
| Total | | 810 |

**VI. Piratanai**

| | | |
|---|---|---|
| Infantry | ... | 1215 |
| Car | ... | 243 |
| Elephant | ... | 243 |
| Horse | ... | 729 |
| Total | ... | 2430 |

**VII Camu**

| | | |
|---|---|---|
| Infantry | ... | 3645 |
| Car | ... | 729 |
| Elephant | ... | 729 |
| Horse | ... | 2187 |
| Total | ... | 7290 |

**VIII. Anikam**

| | | |
|---|---|---|
| Infantry | ... | 10935 |
| Car | ... | 2187 |
| Elephant | ... | 2187 |
| Horse | ... | 6561 |
| Total | ... | 21870 |

**IX. Akkuroni**

| | | |
|---|---|---|
| Infantry | ... | 109350 |
| Car | ... | 21870 |
| Elephant | ... | 21870 |
| Horse | ... | 65610 |
| Total | ... | 218700 |

One may observe, except the last, which is 10 times the previous, all other divisions are 3 times the anterior.

Undoubtedly, this a testimony to the Tamlis ancient civilization and culture.

## 5 வல்லம் கல்வெட்டாய்வும் செய்திகளும்

**ரா. யமுனாராணி**
முன்னாள் கல்வெட்டுப் பயிற்சி நிறுவன மாணவி

காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீ பெரும்புதூர் வட்டத்தில் உள்ள வல்லம் என்னும் ஊர் வரலாற்றுச் சிறப்பு மிக்க ஊர். ஸ்ரீசைனாம்பிகை சமேத ஸ்ரீஅகஸ்தீஸ்வரர் (எ) ஸ்ரீ சடைஈஸ்வரர் திருக்கோயில் இங்கு அமைந்துள்ளது. இந்த ஊர் சென்னையிலிருந்து சுமார் 55 கி.மீ. தொலைவில், ஸ்ரீபெரும்புதூருக்கும் வல்லக்கோட்டைக்கும் இடையில், வல்லக்கோட்டையிலிருந்து 2 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

### கோயிலமைப்பும் சிறப்பும்

ஸ்ரீ சடையீசுவரர் திருக்கோயில் கருவறையினுள் சோமாஸ் கந்தர் உருவம் புடைப்புச் சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ளது சிறப்பாகும். இது பல்லவர் கால மரபாகும். ஆயினும் கோயில் பின்னாளில் புதுப்பிக்கப்பட்டு கி.பி. 12-ம் நூற்றாண்டின் தொடக்க கால அமைப்புடையதாக இன்று விளங்குகிறது. பல்லவர் காலக் கல்வெட்டு பொறிக்கப்பட்ட கற்பலகை ஒன்று இக்கோயில் திருச்சுற்றின் தென்மேற்கு மூலையில் அமைந்துள்ள விநாயகர் சந்நிதி மண்டபத்தின் விதானத்தில் திருப்பணியின் போது வைத்துக் கட்டப்பட்டுள்ளது. மேலும் கோயில் புதுப்பிக்கப்பட்ட காலத்தைச் சேர்ந்த முதலாம் குலோத்துங்க சோழன் மற்றும் விக்கிரமசோழனின் கல்வெட்டுகள் பிரதான கோயிலில் பொறிக்கப்பட்டுள்ளன.

### கல்வெட்டுகளும் செய்திகளும்

பல்லவர் கல்வெட்டு 13 வரிகள் கொண்ட கி.பி. 9ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டாகும். இக்கல்வெட்டின் வாசகம் பின்வருமாறு:

1. . . . . . . .
2. மகாதேவற்கு நந்
3. தா விளக்கு ச
4. ய ஸ்ரீ அதி கா
5. ப் பியன் வை
6. த்த சாவா மூவா

7. பேராடு தொ
8. ண்ணூற்று ஆ
9. று இத்தம்மம் ர
10. க்ஷிப் பான்
11. ஸ்ரீ ப்ரதம்
12. என் தலை
13. மேல ன

இக்கல்வெட்டில் அரசனின் பெயர் மற்றும் இறைவனின் பெயர் உள்ள பகுதி சிதைந்து உள்ளது. மஹாதேவர் எனும் குறிப்பு மட்டும் உள்ளது. இறைவனுக்கு விளக்கு எரிப்பதற்காக அதிகாப் பியன் என்பவன் 96 ஆடுகளைத் தானமாக கொடுத்த செய்தியை இக்கல்வெட்டு கூறுகிறது.

சிவன் கோயில் வெளிப்புறச் சுவரில் முதலாம் குலோத்துங் கனின் 41 அல்லது 43 ஆவது (கி.பி. 1113) ஆட்சியாண்டுக் கல்வெட்டு உள்ளது. ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து ஊற்றுக் காட்டுக் கோட்டத்தில் உள்ள குன்ற நாட்டில் வல்லம் அன்று இருந்த செய்தி இக்கல்வெட்டால் அறியப்படுகிறது. இவ்வூரில் உள்ள திரு அகத்தீஸ்வரமுடைய மகாதேவர்க்கு அவ்வூரார் மூன்று தேவரடியாரைத் தானமாகக் கொடுத்த செய்தி தெரிகிறது. திருவகத்தீசுர மாணிக்கம் என்ற பட்டப் பெயரில் இவர்கள் அழைக்கப்பட்டனர்.

சிவன் கோயில் கருவறை வெளிப்புறச் சுவரின் தென்திசைக் குமுதத்தில் உள்ள கல்வெட்டு, விக்கிரமசோழனின் ஆட்சிக்காலத்தில் (கி.பி. 1118-1135), வல்லத்து ஊரவர்கள் (ஊர்ச் சபையார்) கொல்லை நிலம் ஒன்றைப் பொதுவிடத்தில் பலரும் அறியக் கூவி விற்ற செய்தியைச் சொல்கிறது. செங்குப்பை புலீந்திரன் என்பவர் அந்நிலத்தை நான் வாங்குகின்றேன் எனப் பலரும் அறிய உரக்கக் கூவி விலைக்கு வாங்கித் திரு அகத்தீஸ்வரமுடைய மகாதேவரின் திரு அத்தயாம பூசைக்கும் (நள்ளிரவு பூசைக்கு), திருவமுது படிக்கும் பயன்படும்படி வழங்கியுள்ளார்.

சிவன் கோயில் கருவறை வெளிப்புறச் சுவரின் வடக்கு திசை குமுதத்தில் உள்ள கல்வெட்டும் விக்கிரமசோழன் கல்வெட்டாக இருக்கக்கூடும். ஆனால் இக்கல்வெட்டு பெருமளவு சிதைந்துவிட்ட தால் முழுமையாக அறிந்து கொள்ள இயலவில்லை. கோயிலை ஒட்டிய குடியிருப்புப் பகுதியான மனை நிலம் ஒன்றினை மாற்றி வழங்கிய செய்தி இக்கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

முருகர் கோயில் நுழைவாயிலின் மேற்புறம் உள்ள கல்வெட்டின் வாசகம் பின்வருமாறு :

“சாலிவாகந சகாப்தம் ௲௭௱௨௰௮ல்
அக்ஷய ௵ மார்கழி ௴ கந்தசுவாமி
கோவில் திருப்பணி கட்ட நிறைஞ்சு . . து”

இக்கல்வெட்டு 1806ஆம் ஆண்டில் எழுதப்பட்ட பிற்காலக் கல்வெட்டு ஆகும். இதில் முருகன் கோயில் திருப்பணி நிறைவு பெற்றது குறிப்பிடப்பட்டுள்ளது.

சிவன் கோயில் முன்மண்டப விதானத்தின், தெற்கு பார்த்த வாயிலில் வைத்துக் கட்டப்பட்டுள்ள கல்லில் உள்ள கல்வெட்டு வாசகம் பின்வருமாறு :

“கட்டிவிச்ச தர்மம் செம்பொர்க்கை
அருணாசல மூர் செய்விச்சார் தேவி
பாதம் துணை முன்மண்டபம் நெல
கிழார் கோத்திரம் வெங்கிட்ட மூர்
புத்திரன் முத்துமூர் . . அகிலாண்ட கோடி
பிறமாண்ட நாயகராகிய சடையீசுவர
சுவாமி . . சகாப்தம் ௲௭௱௨௰௯
பிறபவ ௵ ஆனி ௴ . .”

இக்கல்வெட்டு கி.பி. 1807ஆம் ஆண்டைச் சார்ந்த பிற்காலக் கல்வெட்டாகும். இதன்படி நிலக்கிழார் வெங்கிட்ட முதலியார் மகன் முத்து முதலியார் சடை ஈஸ்வர சுவாமி கோயில் மண்டபத்தைச் செய்வித்தார் என்றும் செம்பொற்கை அருணாச்சல முதலியார் தேவி சந்நிதியைக் கட்டிவித்தார் என்றும் அறிகின்றோம்

இக்கல்வெட்டுகள், இவ்வூர்க் கோயில் மற்றும் சமுதாயம் பற்றிய செய்திகளை 1100 ஆண்டுகளுக்கு முன்பிருந்து அண்மைக் காலம் வரை அறியத் துணைபுரிகின்றன.

---

20.10.2003 அன்று கல்வெட்டாய்வாளர் சீ. இராமச்சந்திரன், தொல்லியல் அலுவலர் ச. கிருஷ்ணமூர்த்தி, கல்வெட்டு படிப்பவர் ஈஸ்வரன் கல்வெட்டுச் சிற்றெழுத்தர் பெ. முருகேசன் ஆகியோர் இங்குள்ள கல்வெட்டுகளைக் கண்டறிந்து படியெடுத்தனர். மீண்டும் 2.3.2004 அன்று கல்வெட்டுப் பயிற்சி மாணவர்கள் கள ஆய்வு மேற்கொள்ள அழைத்துச் செல்லப்பட்டனர். மாணவர்கள் ரா. யமுனாராணி, மஞ்சுளாதேவி, மா. பாலசுப்பிரமணியன், பொ. தோ. லோகநாதன், மற்றும் து. தியாகராஜன், ஆய்வில் பங்கு கொண்டனர். முகப்பேறு குணசேகரன், கோயம்பேடு கோபாலகிருஷ்ணன் உடனிருந்து உதவி செய்தனர்.

— பதிப்பு ஆசிரியர்

# 6 தையூர் சிற்பங்களும் கல்வெட்டுகளும்

**சீ. இராமச்சந்திரன்**
கல்வெட்டாய்வாளர்

காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், திருப்போரூர் உள்வட்டத்தில் தையூர் அமைந்துள்ளது. கேளம்பாக்கத்திலிருந்து இவ்வூருக்குத் தனிச்சாலை உள்ளது. இவ்வூரில் மரகதவல்லி உடனுறை முருகேஸவரர் கோயில் என வழங்கப்படும் சிவன் கோயில் உள்ளது. இவ்வூரைச் சேர்ந்த உமாமகேஷ் என்பவரின் வேண்டுகோளின்படியும், தொல்லியல்துறை சிறப்பு ஆணையர் திரு. தி. ஸ்ரீ. ஸ்ரீதர், இ.ஆ.ப. அவர்களின் ஆணைக்கிணங்கவும் இக்கோயில் ஆய்வு செய்யப்பட்டது. கோயிலின் கட்டட அமைப்பு, கி.பி. 13-ஆம் நூற்றாண்டுக் குரியதாகும். ஆயினும் கோயிலிலுள்ள சண்டிகேஸ்வரர், விநாயகர் சிற்பங்கள் கி.பி. 9-10-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாகும். கி.பி. 13-ஆம் நூற்றாண்டு வரையிலும் இக்கோயில் செங்கற்கட்டுமானமாக இருந்திருக்கவேண்டுமென்று அனுமானிக்க முடிகிறது. கள ஆய்வில் இச்கோயிலில் இரு கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டு வாசிக்கப்பட்டன.[1] மேலும், கல்வெட்டு பொறிக்கப்பட்ட கற்பாளம் ஒன்று புதிதாகக் கண்டறியப்பட்டுப் படியெடுக்கப்பட்டு வாசிக்கப்பட்டது. மேற்குறித்த விநாயகர் சிற்பத்தின் பீடத்தில் ஒற்றைவரிக் கல்வெட்டு ஒன்றும் கண்டறியப்பட்டது.[2] | மரகதவல்லியம்மன் சன்னிதியின் மேற்குச்சுவர்க் குமுதத்திலும் பட்டியிலும் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டு (கற்கள் இடம் மாற்றிக் கட்டப்பட்டுள்ளமையால் பொருள் தொடர்ச்சியில் இடர்ப்பாடு நேர்கிறது) சடையவர்மன் சுந்தரபாண்டியனின் 19-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு (கி,பி. 13-ஆம் நூற்றாண்டு) ஆகும். ஜெயங்கொண்ட சோழமண்டலத்து ஆமூர்க் கோட்டத்துப் படுவூர் நாட்டுத் திருவிடவெந்தையைச் சேர்ந்த (தற்போது திருவிடந்தை என அழைக்கப்படுகிறது) முள்ளிக்குடையான் கோலவராக முதலிய பெரிய பெருமாள், திருவேகம்பமுடையான், காரியாழ்வான், தேவநாயகன், வரந் தரும்பெருமாள் ஆகிய அறுவர், படுவூர் நாட்டுச் செம்முகம்பாக்கத்திலுள்ள தங்கள் காணி நிலத்தைத் தேவர் சுவாமிதேவர் என்பவர் கேட்டுக் கொண்டபடி இக்கோயிலுக்குத் திருநாமத்துக் காணியாக வழங்குகின்றனர். இக்கல்வெட்டில், இக்கோயில் இறைவர் பெயர் நாயனார் அழகிய சொக்கனார் என்றும் இறைவரை எழுந்தருள்வித்தோர், திருநாமத்துக் காணியாளரான மேற்குறித்த அறுவருமே என்றும் குறிப்பிடப்பட்டுள்ளன.

கோயிலின் முகமண்டபத்தில் செப்புத்திருமேனிகள் வைக்கப்பட்டுள்ள தளத்தில் பதிக்கப்பட்டுள்ள கல்லில், விஜயநகர அரசர் அச்சுததேவராயரின் சகவருடம் 1458, பிரமாதி சம்வத்ஸர (கி.பி. 1536)க் கல்வெட்டில், ''ஆமூர்க் கோட்டத்துக் குமிழி நாட்டில் ஆயிரம் வேலிப்பற்றில் ஸ்ரீ ராஜகேசரி நல்லூரான தையூர் நயினார் திருமுருகீஸ்வரமுடைய நயினார்'' என்ற குறிப்பு காணப்படுகிறது.

தற்போது வழக்கிலுள்ள இறைவர் பெயர் விஜயநகர ஆட்சிக்காலத்தில் நடைமுறைக்கு வந்துவிட்டதென இதனால் தெரியவருகிறது. புழற்கோட்டத்து சௌந்தர்ய சோழபுரத்து ஆபஸ்தம்ப சூத்திரத்து காஸ்யப கோத்திரத்து அய்யா புத்திரன் தீத்தார்பிள்ளை என்பவர், ஆமூர்க் கோட்டத்து இரண்டாயிரம் வேலிப் பற்றில் நாயக்கத்தனச் சீர்மையில் தட்சிணச் சீர்மையில் குன்றநல்லூர்க் குன்றத்தை இக்கோயிலுக்கு மானியமாக வழங்கியுள்ளார். நில எல்லைகளைக் குறிப்பிடுகையில், கிழக்கே மேலக்கோட்டையூரும், தெற்கே முருகமங்கலமும், மேற்கே நல்லம்பாக்கமும், வடக்கே உத்திரமங்கலமும் இருந்ததாகக் குறிப்பிடப் படுவதால் இந்நிலம் வண்டலூர் - கேளம்பாக்கம் இடையில் அமைந்திருந்தது எனத்தெரிகிறது.

கோயிலின் முன்மண்டபத் தளத்தில் பதிக்கப்பட்ட நிலையில் காணப்பட்ட கல் ஒன்று தற்போது பெயர்த்தெடுக்கப்பட்டுப் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது. அக்கல்லில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டு இதுவரை கண்டறிந்து வாசிக்கப் படாத கல்வெட்டாகும், இக்கல்வெட்டு குரோதன வருடம் ஆடி மாதம் 31-ஆம் தேதி பொறிக்கப்பட்டுள்ளது. கல்வெட்டின் எழுத்தமைதியைக் கொண்டு கணித்தால் இக்கல்வெட்டு, கி.பி. 16-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியைச் சேர்ந்ததாகக் கொள்ளலாம். மேலும், மகாமண்டலேசுரன் . . , இம்மடி தொரதர [வா]விச்சைய குமாரத் திருவலதேவ மகாராசா என்ற மன்னர் தன்மசாதனம் பண்ணிக் குடுத்ததாக இக்கல்வெட்டில் குறிப்பிடப்படுகிறது. இது விஜயநகர அரசர் திருமலை தேவ மகாராயரைக் குறிக்கக்கூடும். எனவே இக்கல்வெட்டு கி,பி. 1565ஆம் ஆண்டில் பொறிக்கப்பட்டிருக்கலாம். இக்கல்வெட்டில், ''தையூர் திருமுருகீசுரமுடைய தம்பிரானார்'' என்பது இறைவரின் பெயராகக் குறிப்பிடப் படுகிறது. இக்கோயிலுக்குரிய கிராமங்களுக்கு ஆண்டொன்றுக்கு முப்பது பொன் ''சோடி''யாக (அரசிறை அல்லது quit rent) வசூலிக்கப்பட்டு வந்தது; சீர்மையார். இரட்டி அப்பர் ஆகியோர் முன்னிலையில் அரசர், "சோடி" வேண்டாமென்று சர்வ மானிய வியவஸ்தையாக சன்னிதானத்தில் தாரை வார்த்துத் தந்தார் என்ற செய்தி இக்கல்வெட்டில் குறிப்பிடப்படுகிறது. அதாவது கோயிலுக் குரிய மானிய நிலங்கள், சர்வமானியமாக ஆக்கப்பட்டுள்ளன.

விநாயகர் சிற்பத்தின் பீடத்தில் பொறிக்கப்பட்டுள்ள, கி. பி. 9-10ஆம் நூற்றாண்டுக்குரிய ஒற்றைவரிக்கல்வெட்டு, ''ஸ்ரீ உருமேற்று'' என்பதாகும். உருமேறு என்பது இடியேறு, அதாவது கடுமையான இடி எனப்பொருள்படும். இதனைப் பல்லவ அரசர் பட்டப் பெயரான ''பகாப்பிடுகு'' என்பதையொத்த ஓர் அடைமொழியாகக் கொண்டால் (பிடுகு என்றால் இடி எனப்பொருள்) பல்லவர் ஆட்சியின் இறுதிக் கட்டத்தில் அபராஜிதன், கம்பவர்மன் போன்ற அரசன் ஒருவனின் கலைப் பணியாக இச்சிற்பத்தைக் கருதலாம். அவ்வாறன்றி, இத்தொடர் விநாயகப் பெருமானைக் குறித்திருக்கக் கூடுமா என்பது விரிவான ஆய்வுக்குரியது. வங்காள மாநிலத்தில் புத்தாண்டுப்பிறப்பின் போது Tornado எனப்படும் இடிப்புயல் நிகழ்வுகள் ஏற்படுவதுண்டென்றும், இந்த இடி, ஆனை

முகம் போன்று அமைந்திருப்பதால் இதனை ''ஹத்திஸ்நாரா'' என அழைப்பர் என்றும், ''காள்பைஷாகி'' என்ற பெயரில் இதனை வழிபடுவதுண்டென்றும் தெரிய வருகின்றன. உருமேறு அல்லது உருமேற்று என்பது ஆனைமுகன் வழிபாட்டுடன் தொடர்புடையது தானா? என்பது பற்றியும் வங்காள வழிபாட்டு மரபுகள் தமிழகத்தில் நிலவியுள்ளனவா என்பது பற்றியும் கலை வரலாற்றுக் கண்ணோட்டத்திலும் சமூக வரலாற்றுக் கண்ணோட்டத்திலும் ஆய்வு மேற் கொள்ளப்பட்டால் விடை கிடைக்க வாய்ப்புண்டு.

அடிக்குறிப்பு :

1. இவ்விரு கல்வெட்டுகளும் இந்தியத் தொல்லியல் அளவீட்டுத் துறையினரால் படியெடுக்கப்பட்டுள்ளன. ஆனால் அக்கல்வெட்டு களின் வாசகம் இதுவரை வெளியிடப்படவில்லை.
A.R.E. 222, 223/1915-16

2. கள ஆய்விலும் கல்வெட்டு படியெடுப்பதிலும் இக்கட்டுரையாசிரியருடன் இத்துறையின் கல்வெட்டு படிப்பவர் திரு. க. ஈஸ்வரனும் பங்கேற்றார்.

## பள்ளி மோதின்

கன்னியாகுமரிக்கு அருகில் கடலோரமாக உள்ள முட்டம் என்ற ஊரிலிருந்த ஒரு கல்வெட்டு, திருவிதாங்கூர் தொல்லியல் வரிசை (Travancore Archaeological Series) தொகுதி 6, பாகம் 2 எண் 128இல் பதிப்பிக்கப்பட்டுத் தற்போது பத்மநாபபுரம் அரண்மனைக் காட்சிக்கூடத்திலுள்ளது. தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையின் கல்வெட்டு முனைப்புத் திட்டப் பணியின்போது இக் கல்வெட்டு படியெடுக்கப்பட்டு வாசிக்கப்பட்டது. திருவிதாங்கூர் தொல்லியல் தொகுதியில் இக்கல்வெட்டு கிறிஸ்தவ தேவாலயத்துக்குரியதாகக் குறிப்பிடப் பட்டுள்ளது. கொல்லம் 669 (கி.பி. 1494)க்குரிய இக்கல்வெட்டில் ''பள்ளிக்கு மோதினுக்கும்'' என்ற தொடர் இடம் பெற்றிருப்பதால் இக்கல்வெட்டு, இஸ்லாமியப் பள்ளி வாசலைக் குறிப்பிடுகிறது எனத் தற்போது தெரிய வந்துள்ளது. ''மோதின்'' (மு ஆதின்) என்ற அரபு மொழிச் சொல், பள்ளிவாசலில் தொழுகைக்கு அழைப்பு விடுக்கும் (வாங்கு விளிக்கும்) பதவி வகிப்பவரைக் குறிக்கும். குமரி முட்டத்தில் கி.பி. 1494-இல் இஸ்லாமியப் பள்ளி ஒன்று இருந்த செய்தி இதனால் தெரிய வருகிறது.

# 7

# செம்பரம்பாக்கம் சக்தீஸ்வரர் கோயில் சிற்பங்கள் - கல்வெட்டுகள் ஆய்வு

ச கிருஷ்ணமூர்த்தி
தொல்லியல் அலுவலர்

சென்னைக்குக் குடிநீர் வழங்கும் செம்பரம்பாக்கம் ஏரியைப் பலரும் அறிவர். இந்தச் செம்பரம்பாக்கத்தில் முற்காலச் சோழர் காலத்தில் கட்டப்பட்டு அண்மையில் புதுப்பித்துக் கும்பாபிஷேகம் செய்யப்பட்ட ஓம் சக்தீஸ்வரர் கோயில் குறித்துப் பலரும் அறிந் திருக்க மாட்டார்கள். இங்குப் பாழடைந்த நிலையில் கோயில் இருந்தபோது மூன்று கல்வெட்டுகளைத் தொல்லியல் துறை நிழற் படக்காரர் ஆ. பா, திருஞானசம்பந்தன் கண்டறிந்தார். கோயிலில் உள்ள மூன்று கல்வெட்டுகளை விழுப்புரம் சி. வீரராகவன் பதிப் பித்துள்ளார். (ஆவணம் 13 சூலை 2002) இங்குள்ள சிற்பங்களையும் கல்வெட்டுகளையும் இக்கட்டுரையில் காண்போம்.

செம்பரம்பாக்கம் ஊருக்குக் கிழக்கில், கிழக்கு திசை நோக்கிய படிமேடான பகுதியில் கோயில் தற்போதுள்ளது. கோயிலுக்கு வடக்கில் குளம் உள்ளது. சிவன் கோயில் விமானத்தை மட்டும் சிவலிங்க வடிவில் அமைத்துள்ளனர். கருவறையைச் சுற்றி மூன்று புறமும் உள்ள தேவ கோஷ்டங்களில் வடக்கில் பிரமாவும் மேற்கில் விஷ்ணுவும் தெற்கில் தட்சிணாமூர்த்தியும் காட்சி தருகின்றனர். கருவறை முப்பட்டைக் குமுதத்தின் மேற்கிலும் தெற்கிலும் பாண்டியர் கல்வெட்டுகள் உள்ளன.

கருவறை வடக்கு கோஷ்டத்தில் தாமரைப் பீடத்தில் நின்ற நிலையில் நான்கு கரங்களுடன் பிரமா அருள்பாலிக்கிறார். பின் கைகளில் அட்சமாலை, கெண்டி உள்ளன. கழுத்தில் கழுத்தணி; மார்பில் புரிநூல், கால் வரை ஆடை உள்ளன.

கருவறை மேற்குக் கோஷ்டத்தில் சதுர்புஜ விஷ்ணு காட்சி தருகிறார். சங்கு, பிரயோக சக்கரங்களைப் பின்புறக் கைகளில் காண்கிறோம். கிரீட மகுடத்துடன் கழுத்தில் பலவித அணிகளுடன் விஷ்ணு காட்டப்பட்டுள்ளார். கால் வரை ஆடை காணப்படுகிறது. உண்ணாழிகை அதிட்டானத்தில் முப்பட்டைக் குமுதப்படையில் ஐந்து வரிகளைக் கொண்ட பாண்டியர் கல்வெட்டு நன்னிலையில்

உள்ளது. தென்புறத்தில் தட்சிணாமூர்த்தி கோஷ்டத்தின் கீழ் உள்ளபாண்டியர் கல்வெட்டின் ஒரு பகுதி மறையும்படி திருப்பணி புரிந்துள்ளனர்.

கல்லால மரத்தின் கீழ் தட்சிணாமூர்த்தி, முயலகன் முதுகின் மீது வலது காலை வைத்தபடி சுகாசன நிலையில் காட்டப் பட்டுள்ளார். இருபுறமும் தலா ஒரு முனிவர் உள்ளனர். பின் புறக்கைகளில் அட்சமாலை, அனல் ஏந்திய நிலை. முன்புறக் கைகளில் சின்முத்திரை மற்றும் ஓலைச்சுவடி பற்றிய நிலை. தட்சிணாமூர்த்திக்கு இருபுறமும் தாடியுடன் இருமுனிவர் இருப்ப தால் சனகாதி முனிவர் நால்வரும் உள்ளனர் எனலாம். தட்சிணா மூர்த்தி பாதத்தருகே பாம்பு, ஆலமரக்கிளையில் குரங்கு, பாம்பு, பை போன்றவை உள்ளன.

இங்குள்ள மூன்று கல்வெட்டுகளில் கன்னர தேவனாகிய மூன்றாம் கிருஷ்ணனின் 23ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டே தொன்மை வாய்ந்தது (கி.பி- 962). இக்கல்வெட்டு தனிக்கல்லில் பொறிக்கப்பட்டதாகும். புலியூர்க் கோட்டத்து செம்மரம்பாத்து சத்தீச்வர பரமேச்வரருக்குத் திரிகால (மூன்று வேளை) வழிபாட்டின் போது மத்தளம், தாளம், சேகண்டி ஆகிய இசைக்கருவிகளை இசைப்பவர்களுக்கு (ஐந்து கலைஞர்களுக்கு) நிலக்கொடையாக 3000 குழி நிலம் வழங்கப்பட்டது. குளத்தூர் கிழவன் நாகைப் பெருமான் இவன் தம்பியர் கலி, சேந்தபட்டன் ஒன்று கூடி நிலத் தானம் செய்துள்ளனர். நிலத்தின் எல்லைகள் குறிப்பிடும்போது மேட்டுப்பட்டி குழி, கண்ணாறு, தாமரைப்பள்ளம் ஆகியவை கூறப் படுகின்றன. கோயில் சார்பாக நிலத்தைப் பெற்றுக்கொண்ட உண்ணாழிகை உடையார் செம்பூதி கிழவன் மூவடியான், இவன் தம்பியர் சோமயன், அங்கி மூவரும் ஸ்ரீபலிமுட்டாமே மேற்கொள்ள வேண்டும். முட்டுபட்டால் நாள் ஒன்றுக்கு மஞ்சாடி பொன் அபராதம் செலுத்தவேண்டும் என்று கூறப்பட்டுள்ளதால் முற்காலச் சோழர் காலத்தில் இக்கோயில் கட்டப்பட்டது எனலாம். எனினும் பாண்டியர் காலத்தில் திருப்பணி நடைபெற்று கல்வெட்டுகளும் வெட்டப்பட்டன. இரண்டாம் குலசேகர பாண்டியனுடைய 41ஆவது ஆட்சியாண்டில் (கி.பி. 1355) செம்மரம்பாத்து ஆளுடை யார்க்சத்தீசுரமுடைய மகாதேவர்க்கு இவ்வூர் பரிக்கிரகத்தாரில் மணவாணன் (மணவாளன்?) ஆனந்தரவிலக்காப் பல்லவரையன் சந்தி விளக்கு ஒன்று வைக்க ஏற்கெனவே இரண்டு பசுக்களை வழங்கியிருந்தான். கோயில் காணியுடைய பட்டர் இருவர் தானத்தைப் பெற்றுக்கொண்டு கல்வெட்டு வெட்டி வைத்தனர்.

இரண்டாம் விக்கிரமபாண்டியனுடைய மூன்றாவது ஆட்சி யாண்டின் போது (கி.பி. 1253-இல்) சத்தீசுரமுடைய மகாதேவர்க்கு நொந்தா விளக்கு ஒன்று எரிக்கவேண்டி விச்சாதரன் அஞ்சல் என்ற பெருமான் இரண்டு பசுக்களை வழங்கி உள்ளான். இவன் செம்மரம்பாத்தைச் சேர்ந்த கிழான் ஆவான். கோயில் சிவப் பிராமணன் மானாகரபட்டன் ஞானம் பெற்றான். பசுக்களைப் பெற்றுக்கொண்டு நெய்வழங்க உடன்பட்டதைக் கல்வெட்டு குறிப்பிடுகிறது. மூன்று கல்வெட்டுகளிலும் மண்டலம் கூறப்பட வில்லை. கன்னரதேவன் கல்வெட்டில் மட்டும் புலியூர்க் கோட்டம் இடம்பெறுகிறது. 'செம்மரம்பாத்து' என்றே மூன்று கல்வெட்டு களிலும் ஊர்ப்பெயர் கூறப்படுவதால் இதுவே பிற்காலத்தில் செம்பரம்பாக்கமாக மாறியது எனலாம். செம்மரம் என்பது செஞ்சந்தன மரமாக இருக்கலாம். அம்மரத்தின் அடிப்படையில் இவ்வூர் பெயர் பெற்றிருக்கலாம். ஆளுடையார் சத்தீசுரமுடைய மகாதேவர் என்ற பெயரே தற்போது ஓம் சக்தீஸ்வரர் என வழங்கப்படுகிறது.

## சாளுக்கியரை நினைவுபடுத்தும் ஊர்

சாளுக்கியரை நினைவூட்டும் வண்ணம் சளுக்கி என்ற சிற்றூர் வந்தவாசி வட்டத்தில் உள்ளது. இவ்வூரில் மனுகுல மகாதேவ ஈஸ்வரமுடையார், சோழ கேரள விண்ணகர், வீரகேரளப் பெரும்பள்ளி ஆகிய கோயில்கள் முற்காலத்தில் வளமுடன் விளங்கின. சளுக்கி என்ற ஊர் ஜெயங்கொண்ட சோழமண்டலத்து வெண்குன்றக் கோட்டத்து வெண்குன்ற நாட்டில் ஒரு நகராக இருந்தது.

வந்தவாசி அருகே சிற்றூராக உள்ள வெண்குன்றமே முன்பு கோட்டமாகவும் நாடாகவும் இருந்துள்ளது. சளுக்கி என்ற ஊர் சளுக்கிப்பற்று என்றும் சளுக்கியாகிய சோழ கேரளம் என்றும், சோழகேரளபுரம் என்றும் வழங்கப்பட்டது. இவ்வூரில் 14 கல்வெட்டுகள் உள்ளன. பூவேந்திய சோழமாணிக்கன் என்ற தேவரடியார் கி.பி. 1127-இல் திருப்பள்ளியறை நம்பிராட்டியாரை மனுகுலகேசரீஸ்வரமுடையார் கோயிலில் எழுந்தருள்வித்து தினமும் விளக்கு வைக்க தானம் புரிந்துள்ளதை ஒரு கல்வெட்டு குறிப்பிடு கிறது.

# 8 பம்மல் புஷ்பகிரீஸ்வரர் கோயில் கல்வெட்டுகள்

பதிப்புக்குழு

காஞ்சிபுரம் மாவட்டம் தாம்பரம் வட்டத்தில் அமைந்துள்ள பம்மல் என்ற கிராமத்தில் புஷ்பகிரீஸ்வரர் என வழங்கப்படும் கோயில் உள்ளது. இக்கோயிலின் கருவறையில் காணப்படும் கல்வெட்டுகளைத் தொல்லியல் துறை சிறப்பு ஆணையர் திரு. தி. ஸ்ரீ. ஸ்ரீதர், இ.ஆ.ப., 14-10-04 அன்று முகாம் மேற்கொண்டு ஆய்வு செய்தார்.[1] பின்னர் கல்வெட்டுக்கள் படி எடுக்கப்பட்டன. இக்கோயிலில் உள்ள இரு கல்வெட்டுகளும் வரலாற்றிக்குப் பயன்படும் சில குறிப்புகளைக் கொண்டுள்ளன.

வீரராஜேந்திர சோழ தேவர் என வழங்கப்பட்ட மூன்றாம் குலோத்துங்கனின் 35ஆவது ஆட்சியாண்டில் திருநீர்மலை எம்பெருமானுக்குத் திருவிடையாட்டமாகத் தாம்புரமான குணசீல நல்லூரில் நிலம் விடப்பட்டது. தற்போது தாம்பரம் என வழங்கப்படும் நகரம் சோழர் காலத்தில் தாம்புரம் என்றும் குணசீலநல்லூர் என்றும் வழங்கப்பட்டுள்ளமை இக்கல்வெட்டால் தெரியவருகிறது. தானம் வழங்கிய நிலத்தினைக் குறிப்பிடும் போது உள்ளூர் தேவதானம், திருவிடையாட்டம், துக்கைப்பட்டி, (துர்க்கைப்பட்டி,) பிடாரிப்பட்டி ஆகிய நிலங்கள் நீக்கிப் பிற நிலங்கள் வழங்கப்பட்டன என்பதால் சிவன்கோயில், துர்க்கை கோயில், பிடாரி கோயில் ஆகியவை இங்கிருந்தமை உறுதியாகிறது. பஞ்சநதிவாணன் நல்லநாயன் நீலகங்கரையன் என்ற சிற்றரசர் தாம் கொள்ளும் கடமைபட்டிகுற்றம், கார்த்திகைப் பச்சைக்காசு, வெட்டிக்காசு, வெட்டி அரிமுக்கை, தரிசுநிலக்கடமை உட்படப் பல வரிகளையும் நிலத்துடன் எம்பெருமானுக்கு வழங்க ஆணை பிறப்பித்துள்ளார். கல்வெட்டில் காணப்படும் பஞ்சாங்கக் குறிப்புகளைக் கொண்டு இந்த ஆணை 3-11-1210-இல் வெளியிடப்பட்டது என்று கணக்கிடலாம். பம்பல் அழகப்பெருமானுக்கு உரிய திருவிடையாட்டம் இவ்வூரில் இருந்ததால் அதை நீக்கி நிலமும் வரிகளும் வழங்கி உள்ளார் என்றும் கல்வெட்டின் மூலம் அறிகிறோம். நீலகங்கரையர் தொண்டைமண்டலத்தில் பல கோயில் கல்வெட்டுகளில் தானங்கள் அளித்தவராகச் சொல்லப்பட்டுள்ளார். மற்றோர் கல்வெட்டு மூன்றாம் இராசராசனுடைய 21ஆவது ஆட்சியாண்டின்போது (கி.பி. 1227) வழங்கப்பட்ட உபயத்தைக் குறிப்பிடுகிறது. ஜெயங்கொண்ட சோழமண்டலத்துப் புலியூர்க் கோட்டமான குலோத்துங்க சோழவளநாட்டுச் சுரத்தூர் நாட்டு பம்மலில் எம்பெருமான் அழகப்

பெருமாளுக்குக் குத்தன்பாக்கத்து[2] இருக்கும் மன்றாடி (இடையர்) களில் பட்டனான நீலகங்கரையக்கோன் சந்தி விளக்கு வைக்கிறான். அழகப்பெருமாள் கோயிலின் திருவடிப்பிடிப்பாரில் நைமிசைப் பாண்டவ தூதபட்டன் மகன் நீர்வண்ணப் பெருமான் பால் கறக்கும் பசு ஒன்றும் நாகு ஒன்றும் வழங்கி, கோயிலில் கல்வெட்டும் வெட்டி வைத்துள்ளான். நீலகங்கன் என்ற சிற்றரசரின் பெயரைக் கோயில் மன்றாடியான இடையனும் வைத்துக் கொள்ளப்பட்டிருப்பதின் மூலம் இடையரின் செல்வாக்குப் புலனாகின்றது.

இவனது இயற்பெயரான நீர்வண்ணப் பெருமாள் என்பது அருகில் உள்ள திருநீர்மலை இறைவனின் பெயராகும். திருநீர்மலை அரங்கநாதப் பெருமாள் கோயிலில் உள்ள இராமர் சன்னிதியில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டுகளில் நான்கு பம்மல் நக்க நாயனார் கோயில் வழிபாட்டிக்கும் திருவிழாவுக்கும் நிலமளிக்கப்பட்ட செய்தியைக் குறிப்பிடுகின்றன (554-557/1912). அவற்றில் மூன்றாம் குலோத்துங்கனுடைய இருகல்வெட்டுகளில் (கி.பி. 1209-1210) பஞ்சநதிவாணன் நீலகங்கரையன் நல்ல நாயனான சோழகங்கதேவன் இடம் பெறுகின்றான். இங்குள்ள குலசேகர பாண்டியன் காலத்திய கல்வெட்டில் பஞ்சநதிவாணன் திருவேகம்ப முடையான் நீலகங்கன் தனது பிறந்த நாளான பங்குனி ஹஸ்த நட்சத்திரத்தன்று பம்மல் நக்க நாயனார் கோயிலில் திருவிழா நடத்த ஏற்பாடு செய்த குறிப்பு உள்ளது. திருநீர்மலை இராமர் சன்னதியில் உள்ள இக்கல்வெட்டுகள் பம்மலில் இடிந்து போன நக்கநாயனார் கோயிலிருந்து இங்கு கொண்டு வந்து கட்டப்பட்டனவா? என்ற ஐயம் எழுகிறது.

அக்கீஸ்வரர் கோயிலில் உள்ள துண்டுக் கல்வெட்டொன்று எண்ணெய் வணிகர்கள் இராசகேசரி நாழியால் எண்ணெய் வழங்கிய விபரத்தைக் குறிப்பிடுகிறது. பராமரிப்பின்றிக் காணப்படும் இக்கோயில் சற்று உயரத்தில் சிறு குன்றின்மீது கட்டப்பட்டுள்ளது. 19ஆம் நூற்றாண்டளவில் திருப்பணி மேற்கொண்டதைத் தெரிவிக்கும் வகையில் கற்களில் தமிழ் எண்கள் காணப்படுகின்றன.

---

1. இத்துறை சென்னைத் தொல்லியல் அலுவலர் திரு. ச. கிருஷ்ணமூர்த்தி, நிழற்படம் எடுப்பவர் திரு. ஆ. பா. திருஞானசம்பந்தம் மற்றும் திரு. க. ஈஸ்வரன் திரு. சி.ஜோதி ஆகியோர் இக்கல்வெட்டுகளைப் படி எடுத்தனர்.
2. பார்க்க கல்வெட்டிதழ் 64, அக்டோபர் 2004, ''குத்தம்பாக்கம் கல்வெட்டுகள் கட்டுரை''

# தமிழகக் கல்வெட்டுகள் படியெடுக்கும் முனைப்புத் திட்டம்

**தமிழகக் கல்வெட்டுகள்**

தமிழகம், வரலாற்றுத் தொடக்ககாலம் முதற்கொண்டே பெற்றுள்ள வளமான எழுத்தறிவின் காரணமாகச் சமயக் கொடைகளை ஆவணப்படுத்துவதையும், ஆவணங்கள் அழிந்து விடாமலிருக்க அவற்றைக் கல்லில் பதிவதையும் நடைமுறைக்குக் கொண்டு வந்துவிட்டது. தொடக்கக் காலத்தில் ஒன்றிற்கு இரண்டாகத் தமிழ், வட்டெழுத்து என இரு எழுத்துக்கள் தமிழ் மொழியை எழுதுவதற்காகப் பயன்பட்டன. சமஸ்கிருத மொழியை எழுதுவதற்காக 6ஆம் நூற்றாண்டு முதல் கிரந்த எழுத்து தமிழகத்திற்கென்றே தனிப்பட உருவாகி விட்டது. பல்லவர் காலத்தில் தொடங்கிச் சோழர்காலத்தில் கருங்கல்லால் கட்டப் பட்ட கோயில்கள் பல்கின. இப் பின்புலத்தில் கால்நடைகளாகவும், காசாகவும், பொன்னாகவும் இருந்த சமயக் கொடைகள், பல்வேறு வகையான உரிமைகளுடன் கூடிய நிலக்கொடைகளாக நிலை மாறிய போது, அவற்றை ஆவணப்படுத்தப் பரந்து விரிந்த கோயிற் கற்சுவர்கள் வாய்ப்பாகின. இன்று தமிழகப் பழங் கோயில்களில் குறைந்தது 100 சதுர அடியும், ஸ்ரீரங்கம், சிதம்பரம் போன்ற பெரிய கோயில்களில் பல்லாயிரக் கணக்கான சதுரஅடிகளும் கல்வெட்டுகள் பொறிக்கப் பட்டுள்ளமைக்கு இதுவே அடிப்படைக் காரணமாகும். பரப்பு மட்டு மின்றி எண்ணிக்கையிலும் இன்று இந்திய அளவில் கல்வெட்டுகளில் முதலிடத்தில் இருப்பது தமிழகமே. ஆங்கிலேயர் காலத்தில் அரசு நிர்வாகம், கல்வெட்டுகளைப் படியெடுத்துப் பதிப்பிக்கும் பணியை முதலில் தமிழகத்தில் தொடங்கியே விரிவுபடுத்தியது.

**முனைப்புத்திட்டம்**

தமிழகக் கல்வெட்டுகள் அளவில் மட்டுமல்லாமல், தமிழகப் பண்பாட்டிற்கும், வரலாற்றிற்கும் முதன்மையான அடிப்படைச் சான்று களாக இருப்பதையும், நவீன நகரமயமாக்கல், கல்லுடைப்பு, கருங்கல் ஏற்றுமதி, முறையற்ற திருப்பணிகள், அறியாமை, இயற்கைச் சூழல் ஆகியவற்றால் இவை அழியும்போக்கு மிகுதியாவதையும் மனதில் கொண்டு, அண்மையில் தமிழ் நாடு அரசு தொல்லியல் துறையின் சிறப்பு ஆணையராகப் பொறுப்பேற்ற திரு. தி. ஸ்ரீ. ஸ்ரீதர் இ.ஆ.ப. அவர்கள் போர்க்கால அடிப்படையில் தமிழகக் கல்வெட்டுகளைப் படியெடுத்துப் பதிப்பிப்பது மிகமிக அவசியமென முடிவு செய்தார்கள். அவர்களது பல்லாண்டு நிர்வாகப் பட்டறிவு காரணமாகக் ''கல்வெட்டுகள் படி யெடுக்கும் முனைப்புத் திட்டம்'' 2004 ஆகஸ்டு திங்கள் கடைசி வாரத்தில் செயல்படத் தொடங்கியது. தமிழக அரசின் அரவணைப்

போடு தொய்வில்லாமல் கடந்த மூன்று திங்கள்களாக மேலும் மேலும் முனைப்புப் பெற்று இத்திட்டம் நடந்து வருகிறது.

இத்திட்டத்தில் தொல்லியல் துறையின் அலுவலர்கள் 28 பேரும் பணியாளர்களில் 60க்கு மேற்பட்டோரும், ஏற்கனவே தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பணிகள் பாதிக்கப்படாமல் சுழற்சி முறையில் 12 குழுக் களாகச் செயல்பட்டு வருகின்றனர். கடந்த மூன்று திங்கள்களில் (செப்டம்பர், அக்டோபர், நவம்பர்) ஏறக்குறைய 1750 கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டுள்ளன. சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், வேலூர், தருமபுரி, கிருஷ்ணகிரி, கடலூர், கோவை, ஈரோடு, மதுரை, திண்டுக் கல், தேனி, நாகை, மயிலாடுதுறை, தஞ்சை, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் இத்திட்டத்தின் கீழ், கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டு ஏற்கனவே ஓரளவு படியெடுக்கப்பட்ட மாவட்டங்களான மதுரை, தேனி, திண்டுக்கல், கன்னியாகுமரி, சென்னை, தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் பணி நிறைவு பெற்றுள்ளது. தஞ்சை, நாகை, மயிலாடுதுறை மாவட்டங்களில் படியெடுக்கும் பணி டிசம்பர் திங்களில் நிறைவுபெறவுள்ளது. அதனை அடுத்து மேலுமுள்ள மாவட்டங்களில் கல்வெட்டுப் படியெடுக்கும் பணி தொடங்கவுள்ளது.

சிறப்பு ஆணையர் கல்வெட்டு படியெடுக்கும் பெரும்பாலான இடங்களுக்கு நேரில் சென்று தானும் பங்காற்றுவதோடு, கல்வெட்டு களைப் படிப்பதிலும் ஈடுபட்டு வருவது இத்திட்டத்திற்கு உரமாகவும், பின்புலமாகவும் உள்ளது. இத்திட்டத்தால் அறியப்பட்ட புதிய கல்வெட்டுகளான பம்மல், புழல், குத்தம்பாக்கம், ஆரிக்கம்பேடு, தையூர் கல்வெட்டுகள் மற்றும் சந்தையூர் செப்பேடுகள் ஆகியவை கல்வெட்டு இதழ்களில் கட்டுரைகளாக வெளியிடப்பட்டுள்ளன. இவை தவிர மேலும் அறியப்பெற்றுள்ள கல்வெட்டுத் தகவல்கள் சுருக்கமாக இங்கு செய்தி களாகத் தரப்படுகின்றன.

**தொண்டை நாட்டில் பாண்டிய நாட்டு வியரபாரி**

திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி வட்டம் பழவேற்காட்டை அடுத்துள்ள கோயிலடி அருள்மிகு சிந்தாமணீஸ்வரர் கோயிலின் வெளியே கிடக்கும் பலகைக் கல் ஒன்றிலிருந்து முற்காலச் சோழர் காலத்துக் (கி.பி. 10-ஆம் நூற்றாண்டு) கல்வெட்டொன்று படியெடுக்கப் பட்டுள்ளது. இதில் பாண்டிய நாட்டுக் கோட்டாற்றைச் (நாகர்கோயில்) சேர்ந்த வியாபாரி பட்டாலகன், திருப்பகவன் துறை இறைவனை மீண்டும் பிரதிஷ்டை செய்த செய்தி சொல்லப்படுகிறது. திருப்பகவன் துறையானது ‘மேற்கடல் கோகர்ண சமாநமாகிய கீழ்க்கடல் தீர்த்தமாந திருப்பகவன் துறை’ என்று சொல்லப்படுகிறது. இக்குறிப்பு 10ஆம் நூற்றாண்டளவில் புவியியல் அறிவு வணிகம் காரணமாகத் தெளிவு பட்டிருந்ததைக் காட்டுகிறது. இவ்விறைவனது வழிபாட்டிற்காக ஆரணியாற்றங்கரையில் இவன் நிலங்கள் வாங்கிக் கொடுத்துள்ளான். இவை இளநிரவி சதுர்வேதிமங்கலத்துச் சபையாரிடமிருந்து வாங்கப்

பட்டவை. 'நிரவி' என்பது வணிகர் கூட்டத்தினைக் குறிக்கும் சொல். பிற இடங்களில் 'பெருநிரவி' என்று இச்சொல் இருக்க, இக்கல்வெட்டில் 'இளநிரவி' என்று வருவது குறிப்பிடத்தக்கதாகும். விஜயநகரர் காலத்தில் 'அனந்தராயன் பட்டணமான பழவேற்காடு' என்று அழைக்கப் பட்ட பழவேற்காட்டில் 'தொங்கு கப்பல்' என்ற சீனக் கப்பல்கள் துணி முதலிய சரக்குகளை ஏற்றிச் சென்றுள்ளன. இன்றும் இவ்வூரில் சீனப் பானை ஓடுகள் சிதறிக்கிடப்பதைக் காணலாம். பின்னாளில் டச்சுக் காரர்கள் இங்கு கோட்டையிருப்புடன் வணிகம் செய்துள்ளனர். இப்புதிய கல்வெட்டு 10ஆம் நூற்றாண்டிலேயே பாண்டி நாட்டு வியாபாரி, சோழ அரசன் ஆட்சியில், தொண்டை நாட்டில் உள்ள இவ்வூரில் கொடை தருவது, வணிகம் மற்றும் வணிகச் செல்வாக்கைக் காட்டுவதாக உள்ளது. (கல்வெட்டு படியெடுத்தவர்கள்: திரு. ச. கிருஷ்ணமூர்த்தி, தொல்லியல் அலுவலர் குழுவினர்).

**சத்ய சளுக்கி மண்டபம்**

திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி வட்டம் சின்னக்காவனம் அருள்மிகு நூற்றெட்டீசுவரர் கோயில் அம்மன் சந்நதித் தரையில் பதிக்கப்பட்டுவிட்ட ஒரு கல்லில் பல்லவ மன்னன் நந்திவர்மனின் கல்வெட்டு புதிதாக அறியப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு தமிழும் சமஸ்கிருதமும் கலந்த மொழிநடையில், ஆணித்தலைவகை கிரந்த எழுத்தும் தமிழ் எழுத்தும் கலந்து எழுதப்பட்டுள்ளது. கல்வெட்டு வாசகம் எட்டு வரிகளில்,

> **"ஸ்வஸ்திஸ்ரீ நந்திவர்ம்மஸ்ய ஸமாநாதய [வர்ஷே]உ ஸத்ய சளுக்கிகள் எடுப்பித்த மண்டவம் வாணியத்து தயா செட்டி ஆணத்தியாக இது காத்தானடி என்றலை மேலின. அறமறவெற்க"**

என்றுள்ளது. தயா செட்டி என்ற வணிகனை அரசு ஆணை நிறை வேற்றும் அலுவலராகக் கொண்டு சத்யசளுக்கிகள் என்ற பெயரில் ஒரு மண்டபம் கட்டப்பட்டு அதனில் இக்கல்வெட்டு முன்பு இருந்திருக்கிறது. 6,7-ஆம் நூற்றாண்டில் பல்லவர்களின் பகைவர்களாக இருந்த சாளுக்கி யர்கள் இங்கு 9ஆம் நூற்றாண்டளவில் நண்பர்களாகத் தெரிகின்றனர். இக்கல்வெட்டும் இப்பகுதியில் வணிகர்களது செல்வாக்கினைக் காட்டுவ தாகும். (கல்வெட்டு படியெடுத்தவர்கள்: திரு. சீ. இராமச்சந்திரன், கல்வெட்டாய்வாளர் குழுவினர்)

**கன்னரதேவன் கல்வெட்டு**

திருவள்ளூர்மாவட்டம் திருப்பாலைவனம் அருள்மிகு திருப் பாலீஸ்வரர் கோயில் தரையில் பதிக்கப்பட்டுவிட்ட கல்வெட்டில் 10ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இராட்டிரகூட மன்னன் மூன்றாம் கிருஷ்ணனான கன்னர தேவனின் கல்வெட்டு படியெடுக்கப்பட்டுள்ளது. சிதைந்துள்ள இக்கல்வெட்டு 'கச்சியுந் தஞ்சையுங் கொண்ட ஸ்ரீ கந்நர தேவன்' காலத்தில் பைய்யூர் கோட்டத்து தெயிலூர் நிலைப்புலிக்

குளத்து சபையின் ஆளுங் கூட்டத்தில் ஒருவனான உறுப்புட்டூர் நாரணன் கொடுத்த ஏதோ ஒரு கொடையைக் குறிப்பதாகத் தெரிகிறது. (கல்வெட்டு படியெடுத்தவர்கள்: திரு. சீ. இராமசந்திரன், கல்வெட்டாய்வாளர் குழுவினர்)

**தூணில் அனுமன் சிற்பமும் கல்வெட்டும்**

மேற்சொன்ன அருள்மிகு திருப்பாலீஸ்வரர் கோயில் திருச்சுற்றில் உள்ள தூணில் அனுமன் சிற்பமும், 'ஸ்வஸ்ரீ நுளம்பியாற்றுழான் நாயக்கனாராயணன் அல்[லு]ந்திக்கன் தன்மம்' என்ற கல்வெட்டும் உள்ளன. புதிதாகப் படியெடுக்கப்பட்டுள்ள இக்கல்வெட்டின் எழுத்தமைதி 14-ஆம் நூற்றாண்டாகும். 14-ஆம் நூற்றாண்டளவிலேயே அனுமன் வழிபாடு சிறப்புடன் இருந்தமை, இவ்வூர் ஆந்திர எல்லையை ஒட்டி அமைந்ததனாலாகும். ஆந்திர மாநிலத்தில் 'ஆஞ்சநேயலு குடி' என்ற பெயரில் இன்று பல கிராமக் கோயில்கள் உள்ளன. தமிழகத்தில் இன்றும் பல கோயில்களின் தூண்களில் உள்ள அனுமன் உருவங்கள் வழிபடப்படும் மரபிற்கு இக்கல்வெட்டும் சிற்பமும் முன்னோடி என்று கூறலாம். (கல்வெட்டு படியெடுத்தவர்கள்: திரு. சீ. இராமச்சந்திரன், கல்வெட்டாய்வாளர் குழுவினர்)

**பரிகலன்களில் எழுத்துப் பொறிப்புகள்**

நாகை மாவட்டம் சீர்காழி வட்டம் மகேந்திரப்பள்ளி கோதண்டராமர் கோயிலில் உள்ள செம்பினால் ஆன குடம், வட்டில், தீர்த்தக் கரண்டி, அபிடேகத் தட்டு மற்றும் வெண்கல மணி ஆகியவற்றில் எழுத்துப் பொறிப்புகள் உள்ளன. மணியில் 'ஸ்ரீ விஜய கோதண்டராம சுவாமி கோயிலுக்கு அளக்குடி சி. ராமகிருஷ்ண நாயருக்காரு உபயம்' என்றும், இரண்டு வட்டில்கள் மற்றும் அபிடேகத்தட்டில், 'மகேந்திர பள்ளி ஸ்ரீ விஜய கோதண்டராம சந்நதிக்கு பெ. தனபால் அம்மாள் உபயம்' என்றும், வாயகன்ற பாத்திரம் ஒன்றில் 'சோ. க. கிருஷ்ணன்' என்றும் எழுத்துப் பொறிப்புகள் உள்ளன. இவை 19ஆம் நூற்றாண்டு எழுத்தமைதியில் உள்ளன. (இவற்றை அறிந்து பார்வைப்படியும், நிழற்படமும் எடுத்தவர்கள்: திரு. ச. பரணன், காப்பாட்சியர், குழுவினர்).

**கருவூர்த்தேவர் கல்வெட்டு**

திருமுறைகளில் ஒன்பதாம் திருமுறையான திருவிசைப்பாவில் சில பதிகங்கள் பாடியவரும், முதலாம் இராசராச சோழனின் குருவுமான கருவூர்த்தேவர் பற்றிய இலக்கியச் செய்திகளே இதுவரை கிடைத்துள்ளன. தஞ்சைக் கோயிலில் ஓவியமாக உள்ள உருவம் இவரது உருவமாகக் கருதப்படுகிறது. இவருக்குக் கோயில்கள் கருவூரிலும், தஞ்சையிலும் இருந்தாலும் அவற்றின் கட்டட அமைதிகள் தொன்மையானவையாக இல்லை. இந்நிலையில் கரூர் அருள்மிகு பசுபதி ஈஸ்வரர் கோயிலில் கழிவுநீர் செல்ல வாய்க்கால் வெட்டிய போது ஒரு துண்டுக் கல்வெட்டு கிடைத்து படியெடுக்கப்பட்டுள்ளது. ஐந்து வரிகளில் உள்ள இக்கல்வெட்டு கருவூர்த்தேவற்குக் கோயில் இருந்ததையும், வழிபாடு நிகழ்ந்ததையும் காட்டு

கின்றது. சபையார் கூடி கருவூர் தேவற்குத் திமிலை, சேகண்டி முதலிய வாத்தியங்கள் வாசிப்போருக்கு கொடுக்கப்பட்ட நிலம் தொடர்பான ஒரு தீர்மானம் நிறைவேற்றியது போலக் கல்வெட்டுள்ளது. ''. .றைவற நிறைந்து குறைவறக் கூடி . . .ங்குடுத்து கருவூத்தேவக்கு இவ் . . . . . திமிலை சேகண்டி மற்று வேண்டு . . .ணிகார தச்சகு கருவூத் தேவற்கு . . .தோம் பந்மாயேசுர இலக் . . .''. கருவூர்க் கோயிலில் 1890ஆம் ஆண்டு கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டு தென்னிந்தியக் கல்வெட்டுகள் தொகுதி மூன்றில் வாசகங்கள் வெளிவந்துள்ளன. இன்று கோயிலில் ஒரு கல்வெட்டுக்கூட இல்லை. கிடைத்துள்ள கல்வெட்டு முன்பு படியெடுத்த கல்வெட்டுகளில் ஒன்றாகவும் தெரியவில்லை. கருவூர்த் தேவர் என்பது கருவூர்க் கோயில் சிவபெருமானின் பெயராக இருக்குமோ என்ற ஐயம் எழுவது இயற்கை. ஆனால் முன்பு படியெடுக்கப்பட்ட கல்வெட்டுகள் அனைத்திலும் இறைவன் பெயர் கருவூர் திருவாநிலை உடைய மகா தேவர் என்றும், திருவாநிலை ஆளுடையார் என்றுமே வருவதால் தற்போது கிடைத்துள்ள கல்வெட்டு சிவனடியார் கருவூர்த் தேவர் பற்றியதே என்று கருத பெரிதும் இடம் தருகின்றது. (கல்வெட்டுப் படியெடுத்தவர்கள்: திரு. நாக. கணேசன், காப்பாட்சியர், குழுவினர்).

## பெருந்தோட்டம் பராந்தகன் கல்வெட்டு

நாகை மாவட்டம், சீர்காழி வட்டம், பெருந்தோட்டம், மீன் குட்டை வயல் வரப்பில் மதிரை கொண்ட கோப்பரகேஸரியான பராந்தக சோழனின் 37ஆவது ஆண்டுக் (கி.பி. 944) கல்வெட்டு ஒன்று படியெடுக்கப்பட்டுள்ளது. 20 வரிகளுக்கு மேல் தொடர்ச்சி அறியமுடியாத இக்கல்வெட்டு, சபையார் இவ்வூர்ப் பேரம்பலத்தில் பகலில் கூடி திருநாகீசுவரமுடையார் கோயிலில் வழிபாடு (ஸ்ரீபலி) தொடர்பாக ஏதோ ஒரு தீர்மானம் நிறைவேற்றியதைச் சொல்கிறது. (கல்வெட்டு படியெடுத்தவர்கள்: திரு. ச. பரணன், காப்பாட்சியர், குழுவினர்)

## பாலக் கல்வெட்டு

சிதம்பரத்தை ஒட்டியுள்ள கிள்ளை நடராஜர் மண்டப வாயிலில் உள்ள கல்வெட்டு, 13 வரிகளில், 'சிவமயம் சிதம்பரம் ஸ்ரீ சபானாயகர் கோவில் பொதுவார் ஸோமயாஜித அப்பாசாமி தீக்ஷிதர் நிதந்தசாமி தீக்ஷிதர் வகையறாக்களால் தாரண ஞூ பங்குனி மீ உரு பாலம் வகையறாக்கள் கட்டப்பட்டது'' என்ற வாசகத்துடன் உள்ளது. தாரண வருடம் கி.பி. 1884 வந்ததாக இருக்கலாம். பாலங்கள் அரசால் கட்டப்படாமல் தனிநபர்களால் பொது நோக்கோடு கட்டப்பட்டதற்கு இக் கல்வெட்டு ஒரு சான்றாகவுள்ளது. (கல்வெட்டு படியெடுத்தவர்கள்: திரு. க. நெடுஞ்செழியன் கல்வெட்டாய்வாளர், திரு. இரா. செல்வராஜ், தொல்லியல் அலுவலர் குழுவினர்).

## பொன்னம்பல பரதேசி தர்மம்

சிதம்பரம் காரிப்பெருமாள் கோயில் மகாமண்டபத்தினருகில் உள்ள தனிக்கல் கல்வெட்டு, சிதம்பரம் ஈசான்ய திசை (வடகிழக்கு)யில்

உள்ள ஸ்ரீஅகிலாண்ட நாயகராகிய ஸ்ரீகாரிப்பெருமாள் கோயில் குளம், அதனை ஒட்டிய பல்வகை மரங்கள், கோயில் சொத்துக்கள் ஆகியவற்றின் மீது யாரும் ஆசை கொள்ளக் கூடாது என்று குறிப்பிட்டுப் பொன்னம்பல பரதேசியார் தர்மம் என்று முடிகிறது. கோயில், அதனை ஒட்டிக் குளம், அதனை ஒட்டிய மரங்கள் தர்மம் என்பது சமயத்தின் பேரால் பண்டைய மக்கள் இயற்கை வளமும், நீர்வளமும் காத்த ஒரு நல்ல மரபு என்பது இக்கல்வெட்டால் தெரிகிறது. கல்வெட்டு பொறிக்கப்பட்டது கி.பி. 19ஆம் நூற்றாண்டாகலாம். (கல்வெட்டு படியெடுத்தவர்கள்: திரு. க. நெடுஞ்செழியன், கல்வெட்டாய்வாளர்; திரு. இரா. செல்வராஜ், தொல்லியல் அலுவலர், குழுவினர்)

## கோயில் மணி

தரங்கம்பாடி அருள்மிகு வரதராஜப் பெருமாள் கோயில் மொட்டைக் கோபுரம் அருகில் உள்ள பெரிய வெண்கலமணியில் 'சுஅாகூல௨ ஞூ தரங்கன்பாடி ஸ்ரீ வரதராஜ பெருமாள் அர்த்த ஜாமக் கட்டளை செய்த பெருமாள் பாத சமர்பண' என்ற எழுத்துப் பொறிப் புள்ளது. கி.பி. 1862ஆம் ஆண்டில் இம்மணி, கொடையாகக் கொடுக்கப் பட்டது என்பதும் கொடை கொடுத்தவர் அர்த்த ஜாமப் பூசைக்கும் ஏற்பாடு செய்தவர் என்பதும் தெரியவருகின்றது. இதே போல சீர்காழி வட்டம் நல்லூரில் சங்கு, சக்கரம், திருநாமத்துடன் ''நல்லூர் சி. கோ. கலிங்கச் செட்டியார் குமாரன் ராஜமாணிக்க செட்டியார் உபையம்'' என்ற எழுத்துப் பொறிப்புடன் மற்றொரு மணி உள்ளது. 19ஆம் நூற்றாண்டளவில் பெரிய அளவிலான மணிகள், ஜெர்மனி நாட்டி லிருந்து செய்து கொண்டுவரப்பட்டன என்பது சிதம்பரம் கோயிலில் உள்ள பெரிய மணிகளில் உள்ள ஜெர்மன் மொழிப் பொறிப்புகளால் அறியக் கிடைக்கிறது. (கல்வெட்டு படித்தவர்கள்: திரு.கோ.அர்ச்சுணன், மற்றும் திரு. ச. பரணன், காப்பாட்சியர், குழுவினர்)

## கஜலெட்சுமி சிற்பத்தில் வணிகக்குழுக் கல்வெட்டு

தரங்கம்பாடி வட்டம் திருவிடைக்கழி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கோயில் தலவிருட்சமான குரா மரத்தடியில் ஒரு கஜலெட்சுமி சிற்பம் உள்ளது. அதன் பின்பகுதியில் வணிகக் குழுவின் குத்துவிளக்கு, கொழு, சம்மட்டி, வில், அம்பு, வாள் ஆகிய சின்னங்கள் பொறிக்கப் பட்டு 13ஆம் நூற்றாண்டு எழுத்தமைதியில் ஒரு கல்வெட்டுள்ளது. திருவிடைக்கழியில் உள்ள கணக்கர் தெருவும் பெரிய நாட்டாரின் தெரு என்பதால் அத்தெருவில் உள்ளவர்கள் ஒருவர் விடாமல் எல்லோரும் உபாதி முதலான வரிகள் செலுத்த வேண்டாம் என்றும், இவ்விடம் அஞ்சியவர்களின் புகலிடமாகப் பெரிய நாட்டார் பொறுப்பில் இருந்தது என்றும் சொல்லப்பட்டுள்ளது. (கல்வெட்டு படியெடுத்தவர்கள் : திரு. கோ. அர்ச்சுணன், காப்பாட்சியர், குழுவினர்)

## மைல்கற்கள்

நாகை மாவட்டம் சீர்காழி வட்டம் சித்தன் காத்திருப்பு என்ற ஊரின் சாலையோரமாக ஆங்கிலேயர் கால மைல்கல் ஒன்று உள்ளது. இதில் தமிழிலும் ஆங்கிலத்திலும் 'நாங்கூர் மைல் 1' என்று பொறிக்கப் பட்டுள்ளது. இதேபோல சீர்காழி வட்டத்தில் பனங்காட்டான் குடியில் மற்றொரு மைக்கல் அறியப்பட்டு படியெடுக்கப்பட்டது. இதில் தமிழிலும் ஆங்கிலத்திலும் 4 வரிகளில், '17 LOWER ANNICOT ௰எ லோயரனைக் கட்டு' என்று கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. சீர்காழி வட்டம் பாகசாலை பேருந்து வழித்தடத்தில் தமிழிலும் ஆங்கிலத்திலும் மற்றொரு மைக்கல் உள்ளது. இதில் காவேரிபட்டினம் ரு மைல் என்றுள்ளது. 5 மைல் என்பது 8 கி.மீட்டர் தொலைவாகும். ஆனால் கல் உள்ள இடத்திலிருந்து இன்று காவேரிபட்டினம் 15 கி.மீட்டர் தொலைவு ஆகும். சீர்காழி வட்டத்தில் மங்கைமடம், திருவாலி, திருவெண்காடு ஆகிய ஊர்களிலும் மைல் கற்கள் உள்ளன. (கல்வெட்டு களைப் படியெடுத்தவர்கள்: திரு. ச. பரணன், காப்பாட்சியர், குழுவினர்)

## குளத்தலையும் ஐந்நூற்றுவரும்

திண்டுக்கல் மாவட்டம் வேடச்சந்தூர் வட்டம் தொட்டணம் பட்டி என்ற ஊரில் வல்லக்கொண்டான் சமுத்திரம் என்னும் 60 ஏக்கர், அளவு விரிந்துள்ள ஏரிக்கரைப் பாறையில் கி,பி. 10-ஆம் நூற்றாண்டு எழுத்தமைதியில் இரண்டு வரிகளில் ஒரு கல்வெட்டு புதிதாகப் படியெடுக்கப்பட்டுள்ளது. ''ஸ்ரீபெரும்பள்ளிப் பெருகுளந் தலை யாநை நூற்றுவர் வீரசேகரர் பேர்.'' இதன் பொருள் பெரும் பள்ளி என்ற ஊரின் பெருங்குளத்திலிருந்து வெளிச் செல்லும் கால்வா யின் தலைப் பகுதி அமைப்பின் பெயர் 'ஐநூற்றுவர் வீரசேகரர்' என்பதாகும். பள்ளி என்பது சமணர் அல்லது பௌத்தர் கோயில் உள்ள இடமாகும். ஐநூற்றுவர், வணிகக் குழுவினர் ஆவர். இவ்வூர் அமைத்துள்ள கரூர்-மதுரை இடையிலான சாலை சங்ககாலம் தொட்டு ஒரு வணிகப் பெருவழியாக விளங்கிய சாலையாகும். இக்கல்வெட்டு பண்டைத் தமிழகத்தின் சமயம், நீர்ப்பாசனம், வணிகம் ஆகியவற்றிற்கும் தமிழ் எழுத்தமைதிக்கும் ஒரு முக்கியமான கண்டு பிடிப்பாகும். (கல்வெட்டு படியெடுத்தவர்கள்: திரு நாக. கணேசன், காப்பாட்சியர், குழுவினர்)

## மதுராந்தகப்பள்ளி வேளான் நடுகல்

திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூர் வட்டம் பழைய கரட்டுப் பட்டி சிறுமலை அடிவாரத்தில் உள்ள கன்னிமார் கோயில் அருகில் இரண்டாக உடைந்து போன 10-ஆம் நூற்றாண்டு நடுகல் ஒன்று படி யெடுக்கப்பட்டுள்ளது. கையில் கொடுவாள் ஏந்தியிருக்கும் வீரனின்

இடது தோள் பகுதியில் 8 வரிகளில் உள்ள கல்வெட்டின் வாசகம், 'ஸ்ரீஅரையரெள்ளி கோய்த்திரனான மதுராந்தகப்பள்ளி வேளான்பள்ளி நாட்டு நிரை போகயில் பட்டான்'' என்பதாகும். பள்ளி நாட்டு ஆநிரைகளை எதிரிகள் கவர்ந்து சென்ற போது மதுராந்தகப்பள்ளி வேளான் என்ற நடுகல்லில் உள்ள வீரன் இறந்து பட்டதற்காக இந் நடுகல் எடுக்கப்பட்டுள்ளது. 10-ஆம் நூற்றாண்டாளவில் இப்பகுதியில் சிற்றரசர்களின் ஆதிக்கம் இருந்ததையும் கால்நடைகளுக்கானப் பூசல் இருந்ததையும் இக்கல்வெட்டுத் தெளிவாகக் காட்டுகிறது. (கல்வெட்டுப் படியெடுத்தவர் திரு நாக. கணேசன், காப்பாட்சியர் குழுவினர்)


**விஷமுறி கருடத்தூண்**

தேனி மாவட்டம் உத்தமபாளையம் வட்டம் இராசாபாளையத்தில் ஒரு கருடத்தூணில் கி.பி. 1890ல் ஒரு கல்வெட்டு பதியப் பட்டுள்ளது இலட்சுமிபுரம் பழனியாண்டிப்பிள்ளை மவுன குருவின் அடிமை சா. சுப்பிரமணியபிள்ளை இக்கருடத்தூணை அமைத்த செய்தி சொல்லப்பட்டுள்ளது. கருடன் உருவமும் 'நசிமசி' என்ற மந்திரச் சொல்லும் உள்ள இத்தூணில், விஷமேறியவர்கள் ஈர ஆடையுடன் மூன்று முறை முட்டினால் ஈரம் காய்வதற்கு முன் விஷம் இறங்கும் என்றும், வயிற்றுவலி உள்ளவர்கள் முட்டினால் வயிற்றுவலி நீங்கும் என்றும், பிள்ளையில்லாதவர்கள் இதனில் முட்டி மறுவாரம் தூணிகரிடம் உத்தரவு பெற்றால் பிள்ளைட்பேறு கிட்டும் என்றும் சொல்லப்பட்டுள்ளது. இதுபோலவே மற்றொரு விஷமுறித்தூண் மதுரை மாவட்டம் அலங்கா நல்லூரில் ஏற்கனவே கண்டறியப்பட்டுள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கது. 19-ஆம் நூற்றாண்டில் மக்களிடம் விளங்கிய நம்பிக்கையை இக் கல்வெட்டுகள் காட்டுகின்றன. (கல்வெட்டு படியெடுத்தவர்கள் திரு. பொ. இராசேந்திரன், முனைவர் வெ. வேதாசலம், கல்வெட்டாய்வாளர் குழுவினர்).

**திருநகரித் திருக்கொடிக்கம்பம்**

சிர்காழி வட்டம் திருநகரி அருள்மிகு கல்யாணரெங்கநாதசாமி கோயிலில் உள்ள கொடிக் கம்பத்திற்குத் தாமிரத் தகடு போர்த்தப்பட்டு அதனில் 6 வரிகளில் நீண்ட எழுத்துப் பொறிப்பு வெட்டப்பட்டுள்ளது. கலி 4996, சகம் 1817, இங்கிலீஷ் 1895-ஆம் ஆண்டில் சென்னப்பட்டிணம் முத்தியால்பேட்டை தம்புசெட்டி வீதியில் உள்ள வாலாஜாபேட்டை வெங்கடேச செட்டியார் விருப்பப்படி திருமங்கை யாழ்வார் பிறந்த ஊரான இந்த திருநகரி துவஜஸ்தம்பத்திற்குத் தாமிர கவசம் அவரது தம்பி, மகன் மற்றும் மனைவி ஆகியோர் செய்ததாக எழுத்து பொறிப்பு உள்ளது. (கல்வெட்டு பார்வைப் படியெடுத்தவர்கள் : திரு ச. பரணன், காப்பாட்சியர், குழுவினர்.)


அடுத்த இதழில் தொடரும்



8-11-2004 அன்று சிறப்பு ஆணையர் தலைமையில் திரு. நடன. காசிநாதன், வட்டெழுத்துக்களின் தோற்றம் வளர்ச்சி குறித்துத் திங்கட்பொழிவு ஆற்றினார். அப்போது தமிழக அரசு தொல்லியல் துறை சிறப்பு ஆணையர் திரு.தி.ஸ்ரீ.ஸ்ரீதர் இ.ஆ.ப. அவர்கள் **Archaeological Excavation Sites 1969-1995** என்ற துறை வெளியீட்டு நூலை வெளியிட திரு. நடன. காசிநாதன் அவர்கள் பெற்றுக் கொள்கிறார்கள். **Mrs. Grace gideon** அவர்கள், முதல்வர், உணவக மேலாண்மை சமையற்கலை மற்றும் ஊட்டநெறி தொழில் நுட்பப் பயிலகம், உடன் உள்ளார்கள்.



3-12-2004 அன்று சிறப்பு ஆணையர் திரு.தி.ஸ்ரீ.ஸ்ரீதர் இ.ஆ.ப. தலைமையில் முனைவர் R.பூங்குன்றன், "நடுகற்கள் காட்டும் அரசியல் சமூக வரலாறு" எனும் தலைப்பில் திங்கட்பொழிவு ஆற்றுகிறார்.



23-12-2004 அன்று சிறப்பு ஆணையர் தலைமையில் திருமதி சாந்தி பப்பு அவர்கள் "தொல்லியல் மேற்பரப்பு ஆய்வு நெறிமுறைகள்" பற்றி ஆங்கிலத்தில் உரை நிகழ்த்தினார். அப்போது நடைபெற்ற விவாதத்தில் சிறப்பு ஆணையர் வினா தொடுக்கிறார்.




"வணிகர் ஏரிக் கல்வெட்டு"
தொட்டணம்பட்டி,
திண்டுக்கல் மாவட்டம்.



தையூர் முருகேஸ்வரர் கோயில்
"சண்டிகேஸ்வரர்" - கற்சிற்பம்
கி.பி. 9 - 10 ஆம் நூற்றாண்டு.

"கருவூர்த் தேவர் கல்வெட்டு"
கரூர்



தமிழ்நாடு அரசு தொல்லியல்துறைஅச்சகத்தில் அச்சிட்டு இத்துறை சிறப்பு ஆணையர் திரு.தி.ஸ்ரீ.ஸ்ரீதர், இ.ஆ.ப. அவர்கள் சார்பாகத் திரு ச.கிருஷ்ணமூர்த்தி, தொல்லியல் அலுவலரால் வெளியிடப்பெற்றது.